


தீபத்துக்கு வேலை...

தந்தை லெவேயின் மடல்கள்

Y.S.யாகு, சே.ச.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Lisieux le 22. 11. 1907

Fête de Ste Cécile.

Bien chère nièce.

J'ai reçu ta dernière lettre ainsi que le Rapport écrit pour la réunion du groupe Ste Thérèse. Je suis heureux de constater que Ste Thérèse t'est réellement à bien penser et à bien écrire je constate aussi avec grand plaisir que tu as mis à profit les leçons que tu as faites et ne tu en as retiré le fruit pour en nourrir ton âme. Je suis bien heureux aussi de te voir vaincre ta timidité la timidité chez nous tient un peu de famille, il y a du bon dans la timidité mais il ne faut pas trop en avoir. et beaucoup de bien peut être ainsi empêché. La parole de l'évangile que tu as choisie comme notre texte t'aidera beaucoup durant la vie, et à l'heure de la mort; en pensant au Seigneur tu pourras dire en ton âme: "Seigneur vous pouvez m'appeler, je sais je suis la servante du Seigneur."

Durant le cours de mes méditations sur le saint évangile j'ai été heureux de trouver des paroles qui nous rappellent notre nom de famille et nous invitent à reproduire dans notre vie l'idéal tracé par le Maître qui prononça ces paroles. Votre nom de famille semble être formé de deux mots latins ille celui qui. Veil. qui semble être une transformation et corruption des mots latins Vigil. veilleur celui qui veille donc en notre nom: Ille. vigil. Celui qui veille le veilleur.

இப்படிக்கு லெவே...

பாகம் - 1

தந்தை லெவேயின் மடல்கள்

தமிழாக்கம்

Y.S. யாகு சே.சு.

வைகறை
பதிப்பகம்

இப்படிக்கு லெவே... (பாகம்-1)

© Fr. Y.S. Yagoo, S.J., Tuticorin

First Edition: March 2012 (1000 Copies)

112 pages Demy size 1/8 18.6 kg. Maplitho

Printed in India

ISBN : 978-93-81597-22-4

Vaigarai Publication No. 377

Vaigarai Publishing House
Main Road
Dindigul - 624 001
Phone No. 0451 - 2430 464


Email : vaigaraibooks@gmail.com
Website : www.vaigaraibooks.com

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

Publisher : Maria Singarayar, S.J.

Price ₹. 50.00

அர்ப்பணம்



சிவகங்கையின் சீதனம்
ஆண்டாவூரணியின் ஆதவன்
சருகணியின் புனிதம்
அருள்தந்தை லெவேயின் பிரெஞ்சு மடல்களை
ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்த
பிரெஞ்சு நதியிலிருந்து
பிறந்து வந்த பிதாமகன்
செல்லமாக "ஜி" என்று அழைக்கப்பட்டவர்
அமரர் அருள்தந்தை பால் கிரிவியர் சே.ச.
தந்தையே, உம் செயலால் ஒரு வரலாறு
வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது
இதன் காரணகர்த்தாவான
உம் பாதங்களில் இந்நூலைக்
காணிக்கையாக்குகிறேன்.

மேதகு முனைவர் செ. சூசைமாணிக்கம்
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்
தொலைபேசி : 0475-246666, 241744
தொலைநகல் : 04575-242954
மின் அஞ்சல் : svgbiso@sancharnet.in

ஆயர் இல்லம்
மேலூரர் சாலை
சிவகங்கை - 630 561
தமிழ்நாடு
தென் இந்தியா



ஆசியுரை

"இன்னும் அதிகமாக ஆன்மாக்களைத் தாருங்கள்" என்று தூய சவேரியார் இறைவனிடம் மன்றாடினார். அவரைப் போன்று ஆன்ம தாகம் கொண்டிருந்த அருள்தந்தை லெவே, ஆண்டாவூரணி மற்றும் அதன்சுற்றுப்புறத்தில் இறையழைத்தல் பணிக்கு அதிகமான இளைஞர்களை ஈர்த்தார்.

ஆண்டாவூரணியில் கன்னியர் இல்லம் அமைவதில் அவர் கண்ணும் கருத்துமாயிருந்து அதற்காக அரும்பாடு பட்டதை அவருடைய மடல்கள் தெரிவிக்கின்றன. தம் அண்ணனின் ஒரே மகளான ஒடேட் என்பவருக்கு பாசமுள்ள அப்பாவாக இருந்து தம் கடிதங்களின் மூலம் இறையழைத்தலை ஏற்க அவரை நெறிப்படுத்தியது அவரது மறைபரப்புத் தாகத்தை எடுத்துரைக்கிறது. ஒரே மகளைப் பெற்ற தாய்-தந்தையின் தவிப்பும் பிரிவுத் துன்பமும் ஒருபுறம் இருக்க, இறைவன் விரும்பியதை அவரிடம் கொடுக்கும்போது இம்மையிலும் மறுமையிலும் பன்மடங்காகப் பயன் கிடைக்கும் என்ற உண்மையைப் பெற்றோருக்கு உணர்த்த அவர் தவறவில்லை. இறையடி இணைந்த தம் பெற்றோருக்காகத் தொடர்ந்து 30 நாள்கள் திருப்பலி நிறைவேற்றி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டார் என்பதையும் நாம் அறியவருகிறோம்.

இன்றைய சிவகங்கை மறைமாவட்டப் பகுதிவாழ் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகத் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட அருள்பணியாளர் லெவே தம் நற்செய்திப் பணிகள் பற்றித்தமது தாய்மொழியான பிரெஞ்ச் மொழியில் எழுதியிருந்த மடல்களுள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து **'இப்படிக்கு லெவே...' பாகம் - 1** என்னும் நூலாகத் தொகுத்துள்ளார் **அருள்திரு. Y.S. யாகு சே.ச.** லெவே அடிகளாரின் ஆன்மத் தாகத்தால் பெரிதும் ஈர்க்கப்பெற்று அருள்பணியாளராகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட யாகு அடிகளாரின் எழுத்துப் பணி சிறக்க வாழ்த்தி பாராட்டுகிறேன்.

அருள்தந்தை லெவேயின் மடல்களைப் படிக்கும் இளைஞர்கள் இறையழைத்தலின் மேன்மையை உணர்ந்து இறைவனுக்குத் தங்களையே முழுமையாக அர்ப்பணிக்க முன்வருவார்கள் என நம்புகிறேன்.

ஆசிருடன்,

சிவகங்கை
19.02.2012

✝ **செ. சூசைமாணிக்கம்**
சிவகங்கை ஆயர்

JESUIT MADURAI PROVINCE

Tel: (0451) 2431349
Fax: (0451) 2433848
E-mail(O): mduprovincial@gmail.com;
mducuria@gmail.com
(Direct) : mdu-provincial@jesuits.net

Provincial Office
St. Mary's, P.B. No.6
Dindigul – 624 001
S. India



வாழ்த்துரை

மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலியாம் புனித குழந்தை தெரசாவைத் தனது மடலில் அதிகமாகக் குறிப்பிடும் அருட்தந்தை லெவே அவர்கள் ஆண்டாவூரணியில் அப்புனிதைக்குக் கோவில் கட்டுவதற்காக வெளிநாட்டுப் புரவலர்களை நாடினார். கோவில் கட்டுமானத்திற்காக 90,000 செங்கல்கள் சூளையில் வெட்டப்பட்டுத் தயார் நிலையில் இருப்பதை மடலில் குறிப்பிடுகின்றார்.

ஆலயப் பீடப்பணிக்கான ஆடைகள், தரமான செபமாலைகள், படத்துடன் கூடிய மறைக்கல்விப் புத்தகங்கள், ஆலயப் பாடகர் குழுவிற்கு ஆர்மோனியப் பெட்டி இவற்றைப் பெறுவதற்கும், பெற்றபின் நன்றித் தெரிவிப்பதற்கும் அவர் தயங்கியதில்லை. 'நிலையற்றதைக் கொண்டு நிலையானவற்றை ஈட்டிக் கொள்ளுங்கள்' என்ற இறைவாக்கைத் தூண்டுகோலாகக் கொண்டு அவர் நிறுவிய 7 பள்ளிகளில் ஆங்கில அரசு மானியம் கொடுத்த 5 பள்ளிகள் போக மீதமுள்ள 2 பள்ளிகளுக்கும் வெளிநாட்டுப் புரவலர்கள் மூலம் பொருளுதவியை நாடினார். உறவினர்களும், செல்வந்தர்களும் அவருக்கு வாரிவழங்கி மறைபரப்புப் பணிக்கு உதவி செய்தனர்.

ஆண்டாவூரணியில் திருமறை தழைக்க அவர் செய்த பணிகளும் உதவிகளும் ஏராளம் என்பது அவரது மடல்களைக் காண்போருக்குத் துணைபுரியும்.

மேலும் அருட்தந்தை லெவே பிரெஞ்சு மொழியில் எழுதிய கடிதங்களைத் தந்துதவிய தமிழக இயேசுசபை ஆவணக் காப்பக **அருள்பணி. எட்வர்ட் ஜெகநாதன் சே.ச.** அதனைத் தமிழில் மொழிபெயர்த்த **அருள்பணி. பால் கிரிவியர் சே.ச.** அவற்றைத் தொகுத்து ஒருங்கிணைத்து நூல் வடிவில் கொணர்ந்த **அருள்பணி.Y.S. யாகு சே.ச. 'இப்படிக்கு லெவே...' பாகம் -1** என்ற நூலாக வெளியிட்ட வைகறை மேலாளர் **அருள்பணி. மரிய சிங்கராயர் சே.ச.** ஆகியோர் என் பாராட்டுக்குரியவர்கள்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பங்கு மக்களின் ஆன்மிகம், கல்வி, பொருளாதாரம், மனித மாண்பு போன்ற பண்புகளைப் பளிச்சென வெளிக்கொணரும் எங்கள் மூத்த சகோதரர் தந்தை லெவேயின் கடிதங்கள் வாசிப்போரின் வாழ்வை வளப்படுத்துவதாக.

அன்பும் ஆசீரும்,

திண்டுக்கல்
24.02.2012

செபஸ்தி L. ராஜ், சே.ச.
தமிழக இயேசுசபை மறைமாநிலத் தலைவர்

Rev.Fr. Y.S. Yagoo, S.J.

Headmaster & Correspondent
St. Francis Xavier's Hr.Sec.School,
Thoothukudi – 1

என்னுரை

மனம் திறந்து,

அன்புள்ள

இந்த ஏட்டினைத் திறக்கின்ற இனிய இதயங்களே! உங்கள் பார்வைக்குப் பரிமாறியிருக்க இவைமடல்கள் மட்டுமல்ல. ... இவையெல்லாம் ஏதோ எடுத்துச் சேர்த்த எழுத்துக்களுமல்ல...

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் இப்புண்ணிய பூமியில் உலவி வந்த ஒரு தெய்வீகப்புறா உச்சிமோர்ந்த சுவாசக் காற்றில் உள்ளம் குளிர்ந்து நனைந்த இதயத்தைத் தொட்டுப் பார்க்கிற அனுபவத்தை இங்கு விட்டு வைக்கிறேன்.

பிரெஞ்சு தேசத்திலிருந்து தவழ்ந்து வந்த ஒரு ஆன்மீகத் தென்றல் தான் வலம் வந்த சிவகங்கைச் சீமையில் காலூன்றிய போது, தான் தடம் பதித்த மண்ணில் வறுமையைப் போக்க, வாடிய உள்ளங்களைத் தேற்ற, வளமையை இந்த மண்ணுக்குக் கொண்டுவர ஒரு இதயம் துடித்த ஒவ்வொரு அதிர்வுகளும்தான் வார்த்தைகளாக இந்த மடலில் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

காலரா உருவில் காலன் வந்தபோது அதற்காகக் கண்ணீர் சிந்தியதோடு நின்றுவிடாமல் அவர்களைக் கரைசேர்க்கத் துடித்தது தந்தை லெவேயின் இதயம். விலாசமில்லாத பாமர மக்களுக்குக் கல்வியறிவைக் கொடுத்துக் காலத்தைப் பிரகாசமாகக் காட்டி மகிழ்ந்த தாயுள்ளம் தந்தையின் இதயம், குடிநீருக்கும், ஒரு பிடி சோறுக்கும் தவித்த மக்களுக்கு அட்சய பாத்திரமாய் ஆற்றிய பணிகள் ஏராளம். தன் பாதம் வலம்வந்த செம்மண் பூமி வளமையாக மாற, தான் பிறந்த மண்ணில் கையேந்தி வரவழைத்து வாழ வைத்ததால்தான் இன்றும் வாழும்

புனிதராய் இப்பூமியில் வலம் வந்துகொண்டிருக்கிறார். ஏழைகளுக்கு இரங்கும் இதயம் வடித்த மடல்களின் எழுத்துக்கள். அதனால்தான் இன்னமும் ஈரமாகவே இருக்கின்றது.

கடிதம் என்பது வெறும் பரிமாற்றம் மட்டுமல்ல. அது நாம் வாழ்ந்த காலத்தில் இன்னொருவரை அன்பு செய்ததற்கு இரவாமல் இருக்கின்ற சாட்சி. எழுத்தில் எப்போதும் மௌனமும், வலியும் வாழ்ந்துகொண்டிருக்கும்.

தனது உடன்பிறப்பிற்கும், மகளுக்கும் எழுதும் மடலில் தமிழ் மண்ணை வாழவைக்க தவித்த இதயம் தடம் பதித்தது இன்றும் பாதையாகவும், பாடமாகவும் மனதில் படர்ந்து நிற்கிறது.

இக்கடிதம் கடவுள் பக்தியை வளர்க்கிறது. ஆன்மீகத் தேடலை ஊக்குவிக்கிறது. மக்கள் தொண்டை மலரச் செய்கிறது. அழியா ஆவணங்களாய் அச்சேறியிருக்கிறது. தமிழ் மண்ணில் இறைச்சமூகம் மலரத் தன்னையே பலி கொடுத்த புனித சவேரியார், புனித அருளானந்தரின் அடிச்சுவடுகளையும் தமது மடலில் படியமைத்துத் தந்திருக்கிறார்.

காலத்தால் அழியாத கடவுளின் காரியதரிசி தனது கைப்பட வரைந்த இந்த மாபெரும் பொக்கிசம் தானே வந்து என் மடியில் விழுந்ததல்ல. இதற்குப் பின்னால் இருக்கின்ற இனிய இதயங்களின் பெருமைகளை என்னவென்று சொல்வது.

- பிரெஞ்சு மொழியில் தந்தை லெவேயின் கைப்படப் பிறந்த இந்த மடல்களை இந்த செம்மண் சீமைக்கு இழுத்துவர முதலில் வடம் பிடித்தவர். இவர்தான் பிரெஞ்சு மொழியில் பிறந்த இந்த மடல் குழந்தையை ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கக் காரணமாயிருந்தவர். காலத்ததால் அழிந்த காவியங்களெல்லாம் பலர் கண்ணில் படாமலும் பலர் கண்டுகொள்ளாததாலும் தான் இன்றும் யாருக்கும் கிட்டாது போய்விட்டன. இந்த அரிய மடல்களுக்கு அழகு சேர்த்து செண்பகனூர் ஆவணக் காப்பகத்திலிருந்து அள்ளித் தந்த அமுதசுரபி **அருள்தந்தை எட்வர்ட் ஜெகநாதன் சே.ச.** அவர்கள்.

- பொற்குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போன்று என்னுரைக்கு முன் பொன்னுரையைத் தனது பொற்கரத்தில் வரைந்து சிறப்புச் சேர்த்த மதுரை மறைமாநிலத் தலைவர் **அருள்தந்தை செபஸ்தி L. ராஜ், சே.ச.** அவர்கள்.

- மாணிக்கத்தைப் பொருக்கி எடுத்துவந்து வார்த்தைகளில் கோர்த்து ஒரு காலத்தில் தமது மண்ணில் வாழ்ந்த வரலாறு மனதில் இன்னும் ஈரமாக இருக்கின்ற தந்தை லெவேயின் இதய மடல்களுக்கு உள்ளத்தில் பொங்கி வந்த ஆசியுரையை உவந்தளித்த, புனிதராய்த் தொழ புட்டு போட்டு வைக்கும் **சிவகங்கை ஆயர் மேதகு சூசைமாணிக்கம் D.D.** அவர்கள்

- இந்நூலை, வாசிக்கின்ற யாவருக்கும், மென்மையாக உள்ளம் வருடும் இனிய வார்த்தைகளால் தமிழில் வடித்துத் தந்தவர்கள் பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் **திரு. ராமானுஜம், திரு. அல்போன்ஸ் வணக்கம்** மற்றும் தூத்துக்குடி தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் **திரு. யூஜின், திரு. இரா. செபாஸ்டின் ஆரோக்கியராஜ் , அருள்பணி. சேவியர் ராஜன், சே.ச., திரு. ரோஜர்,** கணிப்பொறியில் தட்டச்சு செய்தவர்கள் **திரு. ராஜ்குமார், திரு. கிங்ஸ்லி இம்மானுவல்** ஆகியோர்.

- அட்டை வடிவமைப்பில் அருட்தந்தை லெவேயை அழகுற வெளிக்கொணர்ந்தவர் எம் பள்ளியின் முன்னாள் ஓவிய ஆசிரியர் **திரு. ராஜ்குமார்** அவர்கள்.

- தீந்தமிழ் தூரிகையால் இந்த நூலுக்கு வண்ணம் தீட்டி புதுப்பொலிவோடு மெருகேற்றிய தூத்துக்குடி தூய மரியன்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் முதுகலை தமிழாசிரியர், **நவீன வார்த்தைச் சித்தர்** எனதருமைத் தம்பி **அருள்சகோ. ஜோ அந்தோனி, தி.இ.ச.** அவர்கள்.

- காலத்தால் அழியாத காவியங்களைத் தனது பதிப்பகத்தில் பதிவு செய்துகொள்கிற வான் புகழ் கொண்ட வைகறை வெளியீட்டாளர் **அருள்திரு. மரிய சிங்கராயர், சே.ச.** ஆகியோருக்கு நெஞ்சில் உதித்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

தமிழ் கூறு நல்லுலகம் இவ் வரலாற்றுச் சான்றுகளைப் படித்து தந்தை லெவே அவர்களின் அருள்பணியை அறிந்து அவரது வேண்டுதல்களின் வாயிலாக நிறை வாழ்வை அடைவார்களாக! தந்தை லெவே அவர்கள் புனிதராகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

தோழமையுடன்,
தந்தை லெவே பீடச்சிறுவன்,
Y.S. யாகு சே.ச.

உள்ளே...

01. இறைப்பராமரிப்பும் ஏழைகளுக்கு உதவும் பாங்கும்	13
02. ஆன்மீக வாழ்வும் புனிதர்களின் பாதையும்	18
03. தாழ்ச்சியும் தாய்மைப் பண்பும்	21
04. நோய் முதல் நாடி...	25
05. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்...	30
06. ஞானம் தூண்டிய புனித தெரேசா	31
07. ஆன்மீகப் பயிற்சியின் ஆழத்தில் மூழ்கி...	33
08. கல்வி வழி மனிதம்	38
09. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்	43
10. கல்விப் பணி மறைப்பணியில் துறவியர் பங்கு	48
11. அழைப்பின் குரல் கேட்டேன்	52
12. ஈதல் இசைபட வாழ்தல்	60
13. உமது சொற்படியே ஆகட்டும்	63
14. கட்டிய எழுப்பியது கோயில் மட்டுமா?	66
15. பெற்ற இன்பம் பெருக	69
16. செம்மண் புனிதர் அருளானந்தரின் வழியில்	72
17. அன்புக்காக எல்லாம் அன்புக்காக...	78
18. மடல் காட்டும் துறவற மாண்பு	83
19. பிரிவே தியாகமாகி...	85
20. அறியவும் அன்பு செய்யவும் அழைத்தாயோ	87
21. சிக்கெனப் பிடித்தேன் உனையே !	93
22. தியாகத் தருவே திருப்பலியே !	97
23. பிச்சைப் புகினும் கட்டல் நன்றே!	99
24. இறைப் பற்றில் புதிய வார்ப்புகளாய்...	101
25. போற்றலும் தூற்றலும் ஒன்றே	105
26. துறவு = அனுபவம் + ஆய்வு + இறைவாக்கு + ஈடுபாடு	108

தந்தை லூயி லெவே,சே.ச. அவர்களின் பணி வாழ்வும் வரலாறும்

1884 – 1973

ஏப்ரல் 6,	1884	பிரான்சு நாட்டில் 'ரன்' மாவட்டத்தில் பிறந்தார்.
	1904	'ரென்னஸ்' குருமடத்தில் இணைந்தார்.
அக்டோபர் 14,	1908	இந்தியா வருகை.
	1912	பாளை தூய சவேரியார் பள்ளியில் ஆசிரியர் பணி, விடுதிக் கண்காணிப்பாளர் பணி.
சனவரி 13,	1920	இயேசு சபை குருவாகத் திருநிலைப்படுத்தப்படல்.
	1921	'ஆண்டாவூரணி' பங்குத் தளத்தில் மக்கள் பணி.
	1923	ஆண்டாவூரணி 'இரக்கத்தின் நாயகி அன்னை' ஆலயக் கட்டுமானப் பணி.
	1929	அருளானந்தர் புனிதர் பட்டம் தயாரிப்புப் பணி.
	1937	ஏழை மாணவர்களுக்குக் கருணை இல்லம் விடுதி அமைப்பு.
	1943	இராமநாதபுரம் பகுதியில் ஆன்மீகப் பணி ஆரம்பம்.
ஜூன் 22,	1947	அருளானந்தரைப் புனிதராக்கிய பூரிப்பு.
	1950	நற்செய்திப் பணியில் தீவிரம்.
சனவரி 31,	1956	சிவகங்கை மறைமாவட்டம் சருகணியில் ஆன்மீகம் மற்றும் சமூகப் பணி.
சனவரி 13	1970	குருத்துவப் பொன் விழா
மார்ச் 21	1973	இறை ஒன்றிப்பு.

1. இறைப்பராமரிப்பும் ஏழைகளுக்கு உதவும் பாங்கும்

ஆண்டாவூரணி, நவம்பர் 22, 1927.

புனித செசீலியா திருநாள்.

என் பிரியமுள்ள மகளுக்கு,

உன் கடிதமும், புனித தெரேசா குழுக் கூட்டத்தின் அறிக்கையும் எனக்குக் கிடைத்தன. புனித தெரேசா, சிந்திக்கவும், நன்றாக எழுதவும் உனக்கு உதவி செய்கிறாள் என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். மேலும், உன் வாசகங்களின் உட்பொருளை நன்கு சிந்தித்து, அதனால் உன் ஆன்மாவைத் திடப்படுத்தி நீ மிகுந்த பயனடைந்திருக்கிறாய் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் காண்கிறேன். உன் பயத்தின் மேல் நீ வெற்றி பெற்று வருகிறாய் என்பதைக் கண்டும் நான் மகிழ்கிறேன். பயம் நம் குடும்பத்தில் இருக்கிறது. பயம் தனக்கேயுரிய குணத்தைக் கொண்டுள்ளது. ஆனாலும் அது அளவுக்கு அதிகமாகப் போக விட்டுவிட்டால், அப்போது நாம் எதுவுமே செய்ய முடியாது. நாம் செய்திருக்கக் கூடிய நன்மையும் தடைப்பட்டுவிடும்.

உன் விருதுவாக்காக நீ தேர்ந்தெடுத்துள்ள நற்செய்தி வார்த்தைகள் உன் வாழ்வின் போதும், உன் மரண நேரத்திலும் உனக்கு மிக உதவியாக இருக்கும். அப்போது, "ஆண்டவரே, நீர் என்னை அழைத்துக்கொள்ளலாம்: நான் வருகிறேன். நான் ஆண்டவருடைய பணிப்பெண்" என்று சொல்ல உன்னால் முடியும்.

எனது திருமறைத் தியானங்களின் போது, நம் தலைவரால் நம் முன் வைக்கப்படுகிற எடுத்துக்காட்டுகளை நம் வாழ்வில் கடைப்பிடிக்க நம்மை அழைக்கிற வார்த்தைகளைக் காணும் போது, நான் மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய குடும்பப் பெயர் இரண்டு வார்த்தைகளால் ஆனது போலத் தோன்றுகிறது: LE (இலத்தினில் "ille" அல்லது "இவன்" மற்றும் "VEIL" (இது "VIGIL" என்ற இலத்தின் வார்த்தையின் திரிபு அல்லது சிதைவு போலத் தோன்றுகிறது.

(விஜில் என்ற இலத்தின் வார்த்தைக்கு "விழிப்பாயிருத்தல்" என்பது பொருள். இந்த இரண்டு வார்த்தைகளையும் சேர்த்துப் பார்த்தால் "விழிப்பாயிருப்பவன்", "காவலுக்கு இருக்கிறவன்" என்ற பொருள் வருகிறது.). கடந்த காலத்தில் நம் முன்னோர்களின் தொழில் காவல் காப்பதாக (காவல்காரர்களாக இருப்பது) இருந்திருப்பதால் இந்தப் பெயர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்க வேண்டும். அல்லது தங்கள் இயல்புப்படி அவர்கள் கவனமாகவும், விழிப்பாகவும், மக்களைத் தட்டியெழுப்புகிறவர்களாகவும் இருந்திருப்பதால், இப்பெயர் வழங்கப் பட்டிருக்க வேண்டும். இனி நம் இறைவன் சொல்வது என்ன?

"தலைவர் விழித்திருக்கக் காண்கிற ஊழியர்கள் பேறு பெற்றோர்..." (லூக். 12:37) ...நற்செய்தியாளரின் இந்த வார்த்தைகளில் இருந்து நமக்குத் தேவையான தூண்டுதலை நாம் பெற்றுக் கொண்டால், நம் வாழ்வுக்கென ஓர் அதியற்புதமான திட்டத்தை நாம் வகுக்க முடியும். இவை நம் குடும்பப் பெயரை நமக்கு நினைவு படுத்துகின்றன. புனிதத் தன்மையை அடைவதற்கு, இறைவன் நம் பெயரில் நமக்காக முன்குறித்துள்ள செயல்களை நிறைவேற்றுவது மட்டும் போதுமானது.

ஏற்கெனவே சேமிக்கப்பட்ட பணத்தை என்ன செய்வது என்று நீ கேட்கிறாய். பாரிஸுக்குச் சென்று திருமதி ப்ளாங்கா கார்ஸியாவைப் பார்க்க உனக்கு வாய்ப்புக் கிடைத்தால், அந்தப் பணத்தை அவளிடம் கொடுத்துவிடு. ஏனெனில் அவள் எனக்காக சில சுரூபங்கள் வாங்கப் போகிறாள். அந்தப் பணத்திலிருந்து அதற்குரிய தொகையை அவள் செலுத்துவாள். மீதிப்பணம் எந்தத் தடையுமின்றி இங்கே வந்து சேர்ந்துவிடும். பணம் நீ எதிர்பார்ப்பதைவிட அதிக வேகமாக செலவழிக்கப்பட்டுவிடும். கடவுளின் மகிமைக்காகவும், புனிதத் தெரேசாவுக்கு வணக்கமாகவும், சிற்றாலயம் கொஞ்சங்கொஞ்சமாக எழும்புவதை நாம் காண்போம்.

எல்லோரும் அறிந்துள்ளது போல, நான் தொடங்குகிற பள்ளிகளில் நான் கல்வி கற்பிக்க மாட்டேன், நான் இயக்குநராக இருப்பேன்; ஆசிரியர்கள் கற்பிப்பதை, சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் கற்பிப்பதை நான் மேற்பார்வையிடுவேன். பள்ளிகளைப் பொறுத்தவரை, பிரெஞ்சு அரசு எங்களிடம் இருக்கக் கூடியதைவிட

பிரிட்டிஷ் அரசு மிக அதிக இரக்கத்தோடு இருக்கிறது. அரசே சொந்தமாகப் பள்ளிகள் நடத்தினாலும், தங்கள் கிறிஸ்தவர்களுக்காக நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களால் நடத்தப்படுகிற பள்ளிகளுக்கும் அது மானியங்கள் தருகிறது, ஆசிரியர்களுக்கான சம்பளத்தில் கிட்டத்தட்ட பாதியை அரசு தருகிறது. அதே போல, புது பள்ளிக் கட்டடங்களுக்கான செலவுகளில் பாதியை அரசே செலுத்துகிறது. மீதமுள்ள பணத்தைக் குழந்தைகளின் பெற்றோரிடம் இருந்தோ, அல்லது அமெரிக்காவிலுள்ள தொண்டு நிறுவனங்களில் இருந்தோ பெற்றுக்கொள்ள நான் முயற்சி செய்கிறேன்.

ஒரு வருடத்திற்கு முன் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஓர் அருட்தந்தை என் உதவியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய பெயர் லெமாலியூ. நான் தவறாகச் சொல்லவில்லை என்றால், அவர் வடக்கு பிரான்ஸிலுள்ள டூர்காயிங் நகரத்தைச் சேர்ந்தவர். இது எனக்கு ஒரு பெரிய விடுதலை. இந்த மதிப்பு மிக்க உதவியாளர் நீண்ட காலத்திற்கு என்னோடு இருக்கலாம். "அவர் உங்களோடு இருக்கும் காலம் வரை, சூழ்நிலையை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று எங்கள் அதிபர் தந்தை எனக்கு எழுதினார்.

திருமதி ப்ளாங்கா கார்ஸியா பல சுரூபங்களை எனக்கு அனுப்புவதாகச் சொன்னதால், நீ சேகரித்துள்ள பொருட்களையும் அவளிடம் நீ ஒப்படைத்துவிடலாம். சுரூபங்கள் வைக்கும் அதே பெட்டியில் அவற்றையும் அவள் வைத்துவிடுவாள்.

இத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தை திருமதி ஹமேலிடமும், மற்றொரு கடிதத்தைத் திருச்சட்ட வல்லுநர் தந்தை லாஹேயிடமும் கொடுத்துவிடு.

பிரான்ஸிலிருந்து வரும் கடிதங்களில் அங்கு பெய்த மழையைப் பற்றி யாரும் எனக்குக் குறிப்பிட்டு எழுதுவதில்லை. இங்கே மழை இல்லாமல் நாங்கள் துன்பப்படுகிறோம். சில கிராமங்களில் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக அறுவடை மிகக் குறைவாக இருந்து வருகிறது. இங்கே, பல ஏழை மக்கள், ஒவ்வொரு நாளும் "விரதம்" இருக்கிறார்கள். அதாவது ஒரு நாளைக்கு ஒரு முக்கிய உணவு மட்டுமே சாப்பிடுகிறார்கள், ஒரு நாளுக்கு ஒரு தடவை மட்டுமே சமைக்கிறார்கள். நம் நாட்டில் சிறு கன்றுகள் நன்கு கொழுக்க நாம் தருகிற அரிசி, இங்கே

அநேக மக்கள் வாங்க முடியாத ஓர் உணவுப்பொருளாக இருக்கிறது; அரிசியைவிடத் தரம் குறைந்த தானியங்களைக் கொண்டுதான் அவர்கள் பசியாற்றிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் நாங்கள் மழைக்காகச் செபிக்கிறோம்; குருக்கள் தங்கள் தினசரி திருப்பலியில் மழை பெறுவதற்காகச் சிறப்புச் செபம் சொல்கிறார்கள். போருக்குப் பிறகு எல்லா இடங்களிலும் வாழ்க்கை மிக விலையுயர்ந்ததாக மாறிவிட்டது.

உதாரணமாக இந்தியாவில் ஒருவர் மதிய உணவுக்கும், மாலை சிற்றுண்டிக்கும், இரவுணவுக்கும் 10 ஃப்ராங்குக்கும் குறையாமல் செலவழிக்க வேண்டியிருக்கும். நான் வால்ட்டுக்குப் பயணம் வந்திருக்கிறேன். அங்கிருந்துதான் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். இன்று காலையில், இன்னும் விளையாத கோதுமைக் கதிர்களை யாரோ தன் வயலிலிருந்து பிடுங்கியிருக்கிறார்கள் என்று ஒருவன் கசப்பான முறையில் முறையிட்டுக் கொண்டிருந்ததைக் கிராமத்தில் நான் கேட்டேன். இதைச் செய்தது யார்? பஞ்சத்தின் பிடியிலிருந்த மக்கள். இவை எல்லாவற்றிலும் கொஞ்சம் நன்மையும் இருக்கிறது: சிறு விரதம் தன்னிச்சையாகச் செய்யப்படும்போது, அது உடலுக்கும் ஆன்மாவுக்கும் நன்மை செய்கிறது. கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு திருநாள் கொண்டாட்டங்கள் நெருங்கி வந்திருக்கும் நேரத்தில் இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்கும். உனக்கு மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்துக் கூற இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். குழந்தை இயேசுவிடமும், அவருடைய அன்னை மரியாளிடமும், புனித சூசையப்பரிடமும் நாம் ஒருவர் ஒருவருக்காக வேண்டிக் கொள்வோம். நாம் ஒன்றுசேர்ந்து குழந்தை இயேசுவுக்கு நம் வணக்கத்தைச் சமர்ப்பித்து, அவருடைய தெய்வீக இருதயம் நமக்குத் தர விருப்பமாயிருக்கிற ஏராளமான இறை அருளைப் பெற்றுக் கொள்வோமாக.

என் அன்புக்குரிய சகோதரரையும், சகோதரியையும் நான் மறந்து விடவில்லை. அவுரேலியா அவர்களுடைய வெள்ளி விழா ஆண்டின் பரிசாக இருக்கிறாள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் திருமுழுக்கு நீரால் மறுபிறப்படைந்துள்ளவர்களும், அவர்களுடைய பெயர்களைப் பெற்றுள்ளவர்களுமான ஒரு சிறு பிறமதக் குழந்தையை, அதாவது ஆண் குழந்தை ஃபிலிபெரையும், பெண் குழந்தை

அவுரேலியாவையும் பரிசாகத் தருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஓடேட் இதில் பொறாமைப்படக் கூடாது. ஏனெனில் கடவுளுக்கு நன்றி, அவளுக்கும் சுமார் பத்து நாட்களுக்கு முன் திருமுழுக்குப் பெற்ற ஒரு சின்ன ஓடேட்டை ஒரு சிறு ஞானப் பரிசாக அவளுக்குத் தர என்னால் முடியும். இந்தச் சிறு குழந்தைகளின் தாய்மார் ஓர் ஆசீருக்காக அவர்களை என்னிடம் கொண்டு வந்தார்கள். அவர்களை ஆசீரளித்த பிறகு, அவர்கள் மிகவும் பலவீனமாக இருப்பதை நான் கண்டேன். அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். இப்போது உங்கள் செபங்களாலும், நற்செயல்களாலும் அவர்களை விண்ணகத்திற்குள் இழுப்பது, அதாவது, இப்போதோ, அல்லது அவர்கள் இளம் பருவத்தை அடையும் போதோ ஒரு நல்ல மரணத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பது, அவர்களுடைய ஞானப் பெற்றோராகிய உங்களைச் சார்ந்தது.

நீ விரும்பினால், மீண்டும் அந்த மறைமாவட்ட வழிபாட்டுச் சட்டம் சார்ந்த புத்தகத்தைத் தபால் வழியாகவோ, அல்லது ஏற்கெனவே தயாராகிக் கொண்டிருக்கிற பார்சலில் அதைச் சேர்ப்பதன் மூலமாகவோ எனக்கு அனுப்பலாம்.

என் சகோதரன் ஜோசப்புக்கு எழுதும்போது நான் மடத்துப் பரிபாலக குருவுக்கும் எழுதுவேன். என் மையத்திலிருந்து தொலைவில், இங்கே வட்டாணத்தில் நான் இருப்பதால், என் இளம் உபகாரிக்கு அனுப்ப என் கைவசம் புகைப்படம் எதுவும் இல்லை. நான் சீக்கிரத்தில் எழுதப் போகிற அடுத்த கடிதத்தில் அது வரும். அதில் என் ஒன்றுவிட்ட சகோதரி எலிசபெத்துக்கும், காவுதின் குடும்பத்து நண்பர்களுக்குமாக மற்றொரு கடிதமும் இருக்கும். புகைப்படங்கள் வரும் வரை, உன் சின்ன மருமகள் அல்லது ஒன்றுவிட்ட சகோதரியின் கடிதத்தை நீ வைத்துக்கொள்ளலாம்.

உன் செபங்களுக்கு என்னை நான் ஒப்புக்கொடுக்கிறேன். கிறிஸ்துமஸ் திருநாளின் பரிசுத்த இரவின் போதும், ஆண்டின் முதல் நாள் நற்கருணை உட்கொள்ளும் நேரத்திலும் நான் உங்கள் அனைவரோடும் ஒன்றித்திருப்பேன்.

உன் சகோதரனும், சித்தப்பாவுமான,

லூயி லெவே,சே.ச.

2. ஆன்மீக வாழ்வும் புனிதர்களின் பாதையும்

ஆண்டாவூரணி,

பெப்ருவரி 25, 1927.

அன்புச் சகோதரரே, சகோதரியே, அன்புள்ள ஓடெட்,

கருணை கூர்ந்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தை "ல லாந்த் த பாமே பாரி ல ஸெல்" அல்லது "பெய்(ன்) த ப்ரெட்டானில்" இருக்கும் திருமதி "பியர் பெல்லாஞ்சோ"வுக்கு அனுப்பிவிடுங்கள். "எலிசபெத் லெப்ஹமோ"வை நீங்கள் சந்திக்க நேர்ந்ததா? இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. அவள் இன்னும் என் கடிதங்களுக்குப் பதில் எழுதவில்லை. அவள் எப்படி இருக்கிறாள்? அவளுக்கு என்ன ஆயிற்று? என் ஞான மகள் மேரி ஃபோன்ட்டேன் இந்த ஆண்டின் முதல் நாளில் எனக்கு எதுவும் எழுதவில்லை.

தந்தை பிகோ, லால் பற்றிக் குறிப்பிடும்போது, என்னிடம், "தெரேஸா ஃபோன்டேன் மிகுந்த வரம் பெற்றவள் என்றும், அவள் ஒரு மிக நல்ல துறவியாக முடியும்" என்றும் கூறினார். வாய்ப்புக் கிடைக்கும்போது, அவளுடைய தாயிடம் இதைப் பற்றிச் சொல்லுங்கள். இத்தகைய ஆலோசனை அவளது ஆன்மாவில் உறங்கிக் கொண்டிருக்கிற துறவற தேவ அழைத்தலின் முதல் விதையாக இருக்கலாம். நானே கூட இதைப் பற்றி அவளுக்கு ஒரு கடிதம் எழுத விரும்புகிறேன். அருட்தந்தை ப்ரோ எழுதிய புனித பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்க்கை வரலாறு உங்களுக்கு நன்கு பழக்கமாகி விட்டது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நானும் கூட அந்த நூலை வாசித்து வருகிறேன். இப்போது இயேசு சபை அருட்பணியாளர் லெனார்ட் க்ராஸ் என்பவரால் தொகுக்கப்பட்ட பிரான்சிஸ் சவேரியாரின் கடிதங்களை நான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவர் லூர்து அன்னையின் காட்சிகள் பற்றிய மிகத் தெளிவான வரலாற்றையும் எழுதியிருக்கிறார். உங்களுக்கு அது கிடைத்தால், லூர்து அன்னையின் காட்சிகளை நன்கு அறிந்து

கொள்ள உங்களுக்குக் கிடைக்கும் அந்த வாய்ப்பைத் தவற விடாதீர்கள். அது மிக விறுவிறுப்பானது, நம் விசுவாசத்தை அது பலப்படுத்துவது. புனிதர்களின் வரலாறுகளைப் பற்றிப் பேசும்போது, எந்தப் புனிதருடைய வாழ்வு நமக்கு மிக நெருக்கமாக இருக்கிறதோ, அப்படிப்பட்ட ஒரு புனிதரின் வரலாற்றைத் தேர்ந்துகொள்வது உங்களுக்கு மிக உதவியாகவும், உங்கள் ஆன்மாவின் ஞான முன்னேற்றத்திற்கு சாதகமாகவும் இருக்கும். இந்தப் புனிதரின் வாழ்வு நம் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும்படி அத்தகைய புனிதரின் வரலாற்றைத் தேர்ந்துகொள்ள வேண்டும்.

இப்புனிதர், நம் ஆன்மாவின் பராமரிப்பை ஒரு மிகச் சிறப்பான முறையில் நாம் ஒப்படைக்கக் கூடிய ஒருவராக இருக்க வேண்டும்; அவர் உத்தமக் கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்களை அடையுமாறு ஒருவன் எந்த நேரத்திலும் மனம் திரும்பக் கூடிய ஒருவராக இருக்க வேண்டும்; நம் ஆன்மாவின் நிறைவு நிலையை அடைய நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதைச் செய்து முடிப்பதன் மூலம், நம்மை மகிழ்ச்சிப்படுத்துகிற ஒருவராக அவர் இருக்க வேண்டும். இப்போது நீங்கள் பல புனிதர்களின் வரலாறுகளைச் சிறப்பான விதத்தில் ஈர்க்கப்படுவதாக நீங்கள் உணர்ந்திருக்க வேண்டும். அவரே, உங்கள் வழிகாட்டியாக, உங்கள் ஆன்மாவின் சிறப்புப் பாதுகாவலராக இருக்க வேண்டும்.

"அப்போஸ்தலிக்க இளம் மகளிர் அமைப்பின்" பிறரன்புப் பணிகளின் பொதுக் கண்காட்சிக்கு நீங்கள் அநேகமாகப் போவீர்கள். இப்போது பீடத் துணிகளும், திருப்பலிக்குரிய உடுப்புகளும் என்னிடம் நிறைய கிடைத்திருப்பதால், இதற்கு மேலும் எதுவும் கேட்க நான் துணிய மாட்டேன். இருந்தாலும், செபமாலைகள், பதக்கங்கள், உத்தரியங்கள் ஆகியவற்றை நான் எப்போதுமே வரவேற்கிறேன். செபமாலைகளைப் பற்றிப் பேசும்போது, உடைந்து போகக் கூடியதும், மிகச் சீக்கிரத்தில் துருப்பிடிக்கக் கூடியதுமான உலோகத்தால் ஆன பலவீனமான கண்ணிகளைக் கொண்ட இரண்டு டசன் செபமாலைகளை அனுப்புவதைவிட, பலமான கண்ணிகள் உள்ள ஒரு டசன்

செபமாலைகளை அனுப்புவது அதிக நல்லது என்பதை நீங்கள் அறிந்திருப்பது நல்லது. நான் உனக்குச் சொன்னது போல, படங்கள் உள்ள மறைக் கல்விப் புத்தகம் ஒன்றை எங்காவது காண நேர்ந்தால், "ல போன் அச்சக" வெளியீட்டாளர்களிடம் எனக்காக நீங்கள் ஒரு பிரதிக்கு ஏற்பாடு செய்துவிடுங்கள். மேலும், அது தந்தை து-க்ரஞ்சுநுவ் அவர்களுக்கு அதை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். அல்லது நீங்கள் விரும்பினால், எனக்குத் தகவல் கொடுங்கள். நான் தந்தை து-க்ரஞ்சுநுவ் அவர்களுக்கு எழுதுவேன். அவர் அதற்குப் பணம் செலுத்திவிடுவார். ஒருவேளை த்யூ ப்ளேஸிக்கு நான் கடிதம் எழுதும்படி நீங்கள் எனக்கு அறிவுரை தருவீர்கள் என்றால், நான் அப்படியே செய்கிறேன். ஆனாலும் ஒருவன் தன் சொந்தக் கடிதங்கள் எப்படி வரவேற்கப்படுகின்றன என்பதை அறியாமல் இருக்கும்போது, எழுதச் சற்றுத் தயக்கமாக இருக்கிறது.

தவக்காலத்தின் முதல் ஞாயிறாகிய அடுத்த ஞாயிறு அன்று, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தேவாலயத்தில், மாபெரும் உயிர்ப்பு விழாவுக்காக நாம் ஒன்றுசேர்ந்து நம்மைத் தயார் படுத்துவோம்.

உங்கள் செபங்களுக்கு நான் என்னைக் கையளிக்கிறேன்.

லூயி லெவே,சே.ச.

தந்தை லெவேயின் அன்றாடச் செபம்

"ஓ என் இயேசுவே
அன்பின் அரசரே
உமது அன்புள்ள இரக்கத்தை நம்புகிறேன்."

லூயி லெவே.சே.ச.

3. தாழ்ச்சியும் தாய்மைப் பண்பும்

ஆண்டாவூரணி,
ஜூலை 14, 1927.

என் பிரிய சகோதரனே, சகோதரியே,

பிரியமுள்ள ஓடெட்,

ஓடெட், லூர்தில்இருந்து எழுதிய கடிதத்திற்காக நான் அவளுக்கு நன்றி கூறுகிறேன். **அவளுடைய எண்ணங்கள் மிக அதிகமாக, என்னுடையவை போலவே இருக்கின்றன.** இந்தியாவுக்குத் திரும்பி வரும் வழியில், லூர்தில் மூன்று நாட்களைச் செலவிடும் மகிழ்ச்சி எனக்குக் கிடைத்தது. அங்கே என்னை அதிகமாகக் கவர்ந்தது அந்தக் கெபிதான். அந்தக் கெபிக்கு முன் நிற்கையில், ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையான தேவ அன்னை விண்ணகத்திலிருந்து வந்து, தன்னுடைய கன்னிமையுள்ள, மாசற்ற திருப்பாதங்களை இங்கே ஊன்றினார்கள் என்ற எண்ணத்தில், தகுதிக்கு மேலான ஒரு ஆன்ம நலத்தை உணர முடிகிறது. அப்போது நம் கற்பனை முற்றிலும் இயல்பான விதத்தில், ஆசீர்வதிக்கப்பட்ட தேவ அன்னை முழு உயிரோடும், ஆன்மா வோடும், உடலோடும், மகிமைப்படுத்தப் பட்டவர்களாகத் தங்கியிருக்கிற விண்ணகத்தைச் சென்றடைகிறது. தன் அரியணையிலிருந்து அவர்கள் நம்மைப் பார்க்கிறார்கள், நம் இருதயங்களில் உள்ள சிந்தனைகள், நாட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றைக் கண்ணுறுகிறார்கள் என்று நாம் உணர்கிறோம்.

அங்கே, கெபியின் அருகில், அன்னை மரியாளின் முன் நம்மை வைத்துவிடுவது எளிதாக இருக்கிறது. நானும்கூட பக்தியோடு சிலுவைப் பாதை செய்ததையும், ஒரு மணி நேரத்தை அங்கே செலவிட்டதையும் கூட மிக நன்றாக நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது. அந்தப் பெரும் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் இயேசுவிடமும், அன்னை மரியாளிடமும் மிகப் பல நல்ல செயல்களை நான் ஒப்படைக்க வேண்டியிருந்தது. அன்று முதல் சீக்கிரத்தில் 19 ஆண்டுகள் ஆகிவிடும். இந்தியாவில் செலவிடப்பட்ட பத்தொன்பது வருடங்கள். புனித பிரான்சிஸ் சவேரியார் இங்கே பத்து வருடங்கள் மட்டும்தான் செலவிட்டார்.

ஆனால் அவை கடும் உழைப்பும், விடாமுயற்சியும், எல்லா விதமான துன்பங்களும் நிறைந்த பத்து வருடங்கள். அவர் எழுதிய கடிதங்களை நான் மீண்டும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவை அருட்தந்தை. எல். க்ரோஸ் என்பவரால் இரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. நம் வாழ்வுகளில் அத்தகைய ஆன்மாவோடு தொடர்பு வைத்திருப்பது நல்லது. அப்போது நம் ஒன்றுமில்லா மையையும், எவ்வளவு குறைவாக நாம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம்.

ஓடெட், லூர்தில் ஒரு புதுமை நிகழ்ந்ததைக் கண்டாள் என்பது பற்றி நான் அகமகிழ்கிறேன். இது அவளுடைய விசுவாசத்தைப் பலப்படுத்த உதவும். அவள் உணர்ந்த இந்த ஆழ்ந்த உணர்வு, கடவுளுக்கு அன்பு செலுத்தும்போது, அவரிடம் எப்படி ஒரு மகனுக்குரிய, வணக்கமுள்ள பயத்தோடு நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நமக்குக் காட்டுகிறது. இது அவள் நீண்ட காலத்திற்கு நினைவில் வைத்துக் கொள்ளும் ஓர் அனுபவமாக இருக்கிறது. அவளுடைய ஆன்மா, இயல்புக்கு மேலான ஒழுங்கோடு, அதாவது படைக்கப்பட்ட பொருட்களின் இடைநிலையின்றி கடவுள் நேரடியாகச் செயல்படுகிற ஒழுங்கோடு தொடர்புள்ளதாக இருந்திருக்கிறது. இந்த அனுபவம்தான் அத்தகைய ஆழ்ந்த உணர்வை உண்டாக்கியுள்ளது. இந்த உலகத்தில் ஆன்மா இந்த ஒழுங்குக்கு அறிமுகமாவதில்லை. கடவுள் இங்கே நமக்கு மிக நெருக்கமாக இருக்கிறார், நம்மிடையே செயல்படுகிறார் என்று அறிவது நம்மைக் குழப்பி, அச்சத்திற்குள்ளாக்குகிறது. புனித தெரேசாவின் வரலாற்றை வாசிக்கும்படி நான் உனக்கு அறிவுறுத்தி யிருந்தேன். தன் பரவசநிலைகளின் தொடக்கத்திலிருந்தே எத்தகைய ஒரு பெரும் பயத்தால் அவள் தாக்கப்பட்டாள் என்றால், கடவுள் அவளைத் தாங்கியிராவிடில் அவள் இறந்திருப்பாள் என்று அவளே கூறுகிறாள். இது அதிக நன்மை செய்யக்கூடிய ஆழ்ந்த உணர்வாக இருக்கிறது. இது தேவ மகத்துவத்தைப் பற்றிய சிந்தனையைத் தந்து, இந்தத் தேவ மகத்துவத்தை வருத்தம் விளைவிக்காதிருக்கும் ஒரு நற்பலனுள்ள பயத்தைத் தூண்டுகிறது.

வயிற்றுப் போக்கு நோய் ஆண்டாவூரணிக்கு வந்துவிட்டது. இந்தக் கொள்ளை நோய் ஒரு மாத காலம் நீடித்திருந்தது. ஒன்பது மரணங்கள் நிகழ்ந்தன. அவர்கள் ஜோசப், மார்கரீட் என்னும் பெயர்களில் திருமுழுக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு பிற மதத்தவரும், ஏழு கிறிஸ்தவர்களும் ஆவர். இவர்களில் நால்வர் சிறு குழந்தைகள், மூவர் பெரியவர்கள்.

இந்த முறை வயிற்றுப்போக்கு நோய் முக்கியமாக சிறு குழந்தைகளைத்தான் தாக்கியது. எங்கள் பள்ளியின் பல சிறுவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். ஆனால், கடவுளுக்கு நன்றி, எல்லோருமே பிழைத்துக்கொண்டார்கள். ஆனாலும் அடிக்கடி எங்கள் பள்ளிக்கு வந்த ஒரு சின்னஞ்சிறுமி, பத்து மணி நேரத்திற்குள் இறந்துபோனாள். காலை பத்து மணிக்கு அவள் வாந்தியெடுக்கத் தொடங்கினாள். இரவு பத்து மணிக்கு அவள் இறந்துவிட்டாள். அவளுடைய தந்தை அவளை இங்கே மடத்தில் சேர்க்க வேண்டும் என்று விரும்பியிருந்தார். அந்த நோக்கத்துடனேயே இங்கே பள்ளிக்கு அனுப்பினார். மற்ற எந்த ஒரு குழந்தையையும் போல மட்டுமின்றி, அவளுடைய பெற்றோர் அவளை மனமுவந்து ஒப்புக்கொடுத்ததால், அவள் பேரமைதியோடு இருந்தாள்.

ஜூலை 3, ஞாயிறு அன்று, 45 வயதான ஒரு கிறிஸ்தவப் பெண் தன் வயலுக்குப் போயிருந்த போது, நோய் அவளைத் தாக்கியது. அவளால் வீட்டுக்குத் திரும்பி வர முடியவில்லை. அளவுக்கு மீறிய வயிற்றுப் போக்கும், வலியும் அந்த அளவுக்கு அவளைப் பலவீனப் படுத்தியிருந்தன. ஒரு வண்டியில் வைத்து அவளைத் திரும்பக் கொண்டுவர வேண்டியிருந்தது. அவர்கள் அவளுக்குக் கடைசி அருட்சாதனங்களை அளிப்பதற்காக என்னை அழைத்தபோது, ஞாயிறு திருப்பலி அப்போதுதான் முடிந்திருந்தது. நான் விரைந்து போனேன். ஆனால் அவளுடைய உடல் ஏற்கெனவே விறைத்தும், குளிர்ந்தும்விட்டது, பற்கள் இறுக்கமாக இருந்தன. அவளுடைய தாய் அவளுக்கு மருந்துகள் தரப்பட வேண்டுமென்று விரும்பினாள், ஆனால் ஒரு சிறு கரண்டி மருந்துகூட அவளுக்கு எங்களால் கொடுக்க முடியவில்லை. நோய் இவ்வளவு தூரம் அதிகரித்த பிறகு, குறிப்பாக நோயாளி, கால்களிலும், கைகளிலும் வன்மையான, கடுமையான வேதனையுள்ள தசைச் சுருக்கங்களுக்கு உள்ளாகிவிடும் போது, அந்த நோயைத் தடுத்து நிறுத்துவது மிகக் கடினமாகிவிடுகிறது. அவள் பிழைப்பதற்கான நம்பிக்கை அதிகம் இருக்கவில்லை. இந்த தசையிறுக்கங்கள் வரும்போது, நோயாளி யாரோ தன்னை ஒரு கோடரியால் தாக்குவது போல் உணர்கிறான். "அவர்கள் என் காலை வெட்டுகிறார்கள், என் கையை வெட்டுகிறார்கள்" என்று அவன் அலறுகிறான். இந்த வேதனை எவ்வளவு கடுமையாயிருக்கிறது என்றால், நோயாளி மிகச் சத்தமாகக் கத்தி அழுகிறான். இத்தகைய சூழ்நிலையில் ஒரு மனைவி, தந்தை, தாய், குழந்தைகளின் உணர்வுகள் எப்படியிருக்கும் என்பதை நீ கற்பனை செய்துகொள்ளலாம். இந்தப்

பரிதாபத்திற்குரிய கிறிஸ்தவப் பெண் பிற்பகல் இரண்டரை மணிக்கு திடீரென்று இறந்த போது, அவளுடைய நான்கு குழந்தைகளின் கதறல்களும், அழுகைச் சத்தமும் கேட்டது. முழுக் கிராமமும் பயத்தால் நடுங்கியது. ஆனால் கடவுளுக்கு நன்றி, இதுதான் நோயின் கடைசிப் பலியாக இருந்தது.

வயிற்றுப்போக்கு நோய் ஒரு தொற்று நோய். இந்த கிறிஸ்தவப் பெண் மற்ற நோயாளிகளுக்குத் தாதியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த போது, நோய் அவளைத் தாக்கியிருக்கலாம். சனிக்கிழமை மாலையில், என் முன்னிலையில், ஒரு வீட்டில் இரண்டு பெண் நோயாளிகளை அவள் கவனித்துக்கொண்டிருந்தாள். கணவனால் மட்டுமே இன்னும் நிற்க முடிந்தது. அவனது தாய்க்கும், மனைவிக்கும் நோய் கண்டிருந்தது. ஆனால் இவர்கள் இருவரும் பிழைத்துக்கொள்ள, இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தவள் இறந்துபோனாள். இந்தியர்கள் வயிற்றுப்போக்கு நோய்க்கு மிக அதிகமாகப் பயப்படுகிறார்கள். என்னால் அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இப்போது வயிற்றுப்போக்கு நோய் மரணம் நிகழ்ந்து கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாகிவிட்டது. ஆனால் இன்னும்கூட அந்நியர்கள் இந்தக் கிராமத்திற்குள் கால்பதிக்கத் துணியாமல் இருக்கிறார்கள். இந்த நோயைக் கண்டு பயப்படாமல் இருக்கும் அருளைக் கடவுள் எனக்குத் தந்திருக்கிறார். ஆனாலும் இந்தக் கொள்ளை நோய் நீடித்திருந்த பதினைந்து நாட்களிலும் நான் கவலையாயிருந்தேன். மருந்துகள் தருவதற்காகவோ, அல்லது நோயாளிகளைச் சந்திப்பதற்காகவோ எந்த நேரத்திலும் என்னைக் கூப்பிடுவது அவர்களுடைய வழக்கமாயிருந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில் பாதி காலியாயிருந்தது கண்டு என் இதயம் சுருங்கிப்போனது. ஏனென்றால் மற்றக் கிராமங்களில் உள்ள மக்கள், தொற்றுநோய் பற்றிய பயத்தால் திருப்பலிக்கு வரவில்லை.

ஆண்டாவூரணியில் பள்ளிகள் நன்கு செயல்படுகின்றன. இவை இன்னும் அதிகம் வளர்ச்சி பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள். இப்போது நன்கு செயல்படுகிற மூன்று பள்ளிகள் என்னிடம் உள்ளன. நான்காவதாக, ஆண்டாவூரணியிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் ஒரு பள்ளியை நிறுவ நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்.

லூயி லெவே,சே.ச.

4. நோய் முதல் நாடி...

ஆண்டாவூரணி,
நவம்பர் 11, 1927.

என் அன்புச் சகோதரரே, சகோதரியே, மகளே,

இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாக ஆண்டாவூரணியை வயிற்றுப்போக்கு நோய் தாக்கியுள்ளது. செப்டம்பர் 8-ஆம் நாளன்று, முத். அருளானந்தரின் மறைசாட்சியம் நிகழ்ந்து ஓரியூரில் ஒரு பெரும் விழா நிகழ்ந்தது. சுற்றிலுமுள்ள எல்லா மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் இதில் கலந்துகொண்டார்கள். அந்தக் கொண்டாட்டங்கள் நடந்த அதே நாளில், ஒரு திருப்பயணி வயிற்றுப் போக்கு நோய்க்குப் பலியாகிவிட்டார்; ஒரு சில மணி நேரத்திற்குள் மிகுந்த வேதனையோடு அவர் இறந்தார். இந்தக் கொண்டாட்டங் களுக்கு வந்திருந்த எண்ணற்ற திருப்பயணிகளைப் பயமுறுத்தி விடாதபடி, இதுபற்றி எதுவும் சொல்லப்படவில்லை. அவர் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாத விதத்தில், இரவோடு இரவாக இரகசியமாக அடக்கம் செய்யப்பட்டார். உண்மையில் ஓரியூரில் வயிற்றுப்போக்கு நோய் இருப்பது பற்றி யாருக்குமே சந்தேகம் வரவில்லை.

இரவின் போது, ஒரு நாடகம் நடத்தப்பட்டது. கிறிஸ்தவர்களும், மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் நல்ல முறையில் அவற்றில் பங்கு பெற்றார்கள். இந்தக் கொண்டாட்டங்கள் நடந்த நாளுக்கு மறுநாளன்று, மற்றொரு திருப்பயணி ஓரியூரில் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டார். ஆனால் அவர் உடனடியாக வேறொரு கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அடுத்த நாள், காலரா சுமார் இருபது கிராமங்களுக்குப் பரவியது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே ஓரியூரில் நடந்த கொண்டாட்டங்கள் முடிந்து திரும்பிய வர்கள்தான். அதே நாளில் ஆண்டாவூரணியிலும் மூன்று பேர் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டதை நான் கண்டேன். மற்றொரு கிராமத்திலும் ஒருவர் பாதிக்கப்பட்டார். அன்று நான் சந்தித்த நான்கு நோயாளிகளில் இருவர் அதே நாள் மாலையிலும் மற்ற

இருவரும் ஒரு சில நாட்களுக்குப் பிறகும் இறந்தார்கள். இப்போது வரை, வயிற்றுப்போக்கு நோயை ஒரு சமயத்தில் ஒன்று அல்லது இரண்டு கிராமங்களில் மட்டும்தான் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த முறை அது ஒரே நேரத்தில் பத்துப் பதினைந்து கிராமங்களில் பரவியது. இதை எவ்வாறு சமாளிப்பது? பல நோயாளிகள், கடைசி அருட்சாதனங்களைத் தர நான் பக்கத்தில் இல்லாமலே இறந்து விட்டார்கள். அவர்களை நான் சந்திக்கவுமில்லை, ஆறுதல் அளிக்கவுமில்லை.

ஒரு நாள் நான் மூன்று கிராமங்களில் நான்கு பேருக்கு நோயில் பூசுதல் கொடுத்தேன். இந்தக் கிராமங்கள் ஒன்றுக்கொன்று தூரமானவை. மற்றொரு தடவை இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறு ஆலயத்திற்கு அருகில் கூடியிருந்த கிறிஸ்தவர்களின் கூட்டம் ஒன்றை நான் சந்தித்தேன். இந்தக் கிறிஸ்தவர்கள் இந்தச் சிறு ஆலயத்திலிருந்து 3, 4, 5, அல்லது 8 கி.மீ. தொலைவிலுள்ள சுமார் பன்னிரண்டு கிராமங்களில் பரவலாக வாழ்கிறவர்கள்.

ஒரு மாலை நேரத்தில், சுமார் அறுபது கிறிஸ்தவர்கள் தங்கள் வருடாந்தரப் பொது ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்காக வந்திருந்தார்கள். அவர்கள் திருப்பலி கண்டு, நற்கருணை வாங்கினார்கள். சுமார் பத்துமணியளவில், இரவு ஓய்வுக்காக எல்லோரும் ஆலயத்தைச் சுற்றி தரையில் படுத்திருந்த போது, திடீரென்று ஒருவர் வந்து, வயிற்றுப் போக்கு நோய்க்கு மருந்து கேட்டார். ஆலயத்திற்கு வந்திருந்த கிறிஸ்தவர்களில் ஒருவருக்கு இந்தத் தொற்றுநோய் தாக்கிவிட்டது. ஒரு கடினமான சூழ்நிலையில் நான் இருப்பதை உணர்ந்தேன்.

இதுவரை, இந்தக் கிராமத்தில் யாரும் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. அப்படி யாராவது இருந்திருந்தால், யாருமே ஒப்புரவு அருட்சாதனத்திற்கு வந்திருக்க மாட்டார்கள். உண்மையில், ஒருவர் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டார் என்பது வெளியானால், மிகச் சிலரே மறுநாள் திருப்பலிக்கு வந்திருப்பார்கள். ஆகவே இந்தச் செய்தி பரவிவிடாதபடி நான் என்னாலான எல்லாவற்றையும் செய்தேன். ஆனால் அது முடியவுமில்லை. இச்செய்தி உடனடியாக கிராமத்தில் பரவிவிட்டது.

இந்தக் கொள்ளை நோயைப் பற்றி அறிந்திருந்த எல்லோரும் அங்கிருந்து போய் பக்கத்து வீடுகளில் தஞ்சமடைந்தார்கள். அந்த நோயாளி தேவாலயத்துக்குப் பக்கத்திலேயே இருந்தால், இந்தத் தொற்றுநோய் பற்றிய பயத்தினால் யாருமே திருப்பலிக்கு வர மாட்டார்கள் என்று அவர்கள் எனக்கு அறிவித்தார்கள். ஒரு மனிதன் எப்படி இந்த எல்லா மக்களையும் திருப்பலியிலிருந்தும் நற்கருணை உட்கொள்வதிலிருந்தும் விலக்க முடியும்?

முக்கியமாக வயிற்றுப்போக்கு என்னும் கொள்ளைநோய் பரவும்போதும், காலையில் ஆரோக்கியமாக இருந்த ஒரு மனிதன் மாலையில் கல்லறைக்கு எடுத்துச் செல்லப்படும்போதும் ஒருவன் எப்படிச் செய்ய முடியும். ஆகவே, நான் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்ட இந்த நோயாளிக்கு நோயிற்பூசுதல் கொடுத்தேன். ஏனென்றால் நோய் அவனில் வெகு வேகமாக அதிகரித்துக் கொண்டிருந்தது. மருந்தால் எந்தப் பயனும் இல்லை. ஆலயத்திலிருந்து ஒரு சில காலடிகள் தூரத்தில் இருந்த ஒரு சிறு வைக்கோல் குவியல் வரைக்கும் அவன் தன்னைத்தானே இழுத்துச் செல்ல நான் அவனுக்கு உதவினேன். ஒரு சில மணி நேரத்திற்குப் பிறகு அந்த நோயாளியால் அதற்கு மேல் கால்களை ஊன்றி நிற்க முடியவில்லை. கைகள், பாதங்கள், காதுகள், மூக்கு, நெற்றி ஆகிய அவனுடைய உடலின் வெளியுறுப்புகள் எல்லாமே பனிக்கட்டி போல் குளிர்ந்துவிட்டன. அவனுடைய மனைவியும், மைத்துனியும் அவனுக்குக் கதகதப்பூட்டும்படி கொஞ்சம் நெருப்பு மூட்டினார்கள்.

நோயாளி ஆலயத்திலிருந்து போதுமான தூரத்தில் இருக்கிறான் என்றும், அவனால் யாரும் எச்சரிக்கையடைய மாட்டார்கள் என்றும் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அவன் ஆலயத்திற்கு மிகப் பக்கத்திலேயே இருந்தான். யாரும் அவனைப் பார்க்க முடிந்தது, அவன் முனங்குவதை ஆலயத்தில் இருந்துகொண்டே கேட்க முடிந்தது. அவன் அங்கேயே இருப்பான் என்றால், யாருமே திருப்பலிக்கு வர மாட்டார்கள். அவனைக் கண்ணுக்கு மறைவாகக் கொண்டு செல்லும்படி ஒரு வண்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வைக்கோல் குவியல் வரைக்கும் தன்னையே இழுத்துக்கொண்டு சென்றிருந்த நோயாளியால், அந்த வண்டியில் ஏற முடியவில்லை. செத்தவனைப் போலத்தான் அவனைத் தூக்கிச்செல்ல வேண்டியிருந்தது. நான்

அவனோடு கொஞ்சத் தூரம் போனேன், திருப்பலி முடிந்தவுடன் அவனுக்கு நோயில்பூசுதல் நன்மை தருவேன் என்று நான் வாக்களித்தேன். இறந்துகொண்டிருந்த அந்த மனிதன் பரிசுத்த ஸ்தலத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கிராமத்திற்குப் போய்ச் சேருமுன் கடவுளிடம் தன் ஆன்மாவைக் கையளித்தான். ஆனாலும் அவனுடைய இந்தப் பலியின் காரணமாக, அவன் எங்கிருந்து வந்தானோ, அங்கிருந்து எங்கள் கிராமத்திற்கு இந்தத் தொற்றுநோய் பரவவில்லை. அவன் எங்கிருந்து ஒப்புரவு அருட்சாதனம் பெற வந்திருந்தானோ அந்தக் கிராமத்திலும் அது பரவவில்லை. உண்மையில் இது ஒரு அதிர்ஷ்டவசமான முன்னேற்றமே. ஏனென்றால் ஒருவேளை அவன் எங்கிருந்து ஒப்புரவு அருட்சாதனம் பெற வந்தானோ, அந்தக் கிராமத்திற்கு ஒரு குரு வந்திருக்கும்போது இந்தத் தொற்று அங்கே பரவியிருக்கும் என்றால், அக்கிராமத்தைச் சேர்ந்த பிற மதத்தினர், கிறிஸ்தவர்களைக் குற்றம் சாட்ட இந்த வாய்ப்பைத் தவற விட்டிருக்க மாட்டார்கள்.

மற்றொரு கிராமத்தில் என் திருப்பலியில் பங்கு பெற்றுச் சென்றவர்கள் நோய்க்கு உள்ளானார்கள். இவர்கள் ஆலயத்திற்குப் புறப்பட்டு வந்தபிறகு, அங்கே ஏற்கெனவே இந்தக் கொள்ளைநோய் பரவியிருந்தது. இவர்கள் இறந்துபோனார்கள். ஆனாலும் சாவுக்குத் தயாராயிருந்தார்கள். அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ, அந்தக் கிராமம் ஆண்டாவூரணியிலிருந்து மிக அதிகத் தொலைவில் இருக்கிறது என்பது பெரிய அதிர்ஷ்டம்தான். அங்கே போய்ச் சேர ஒருநாள் பயணம் செய்ய வேண்டும். அந்த மறைபோதகப் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் வயிற்றுப்போக்கு நோயைத் திருப்பலி தடுத்துவிடும் என்று அதில் மிகுந்த விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு குரு திருப்பலி நிறைவேற்றக் கூடிய ஒரு சிறு ஆலயம் ஒரு கிராமத்தில் இருக்க நேர்ந்தால், அப்படி ஒரு குருவை அழைக்க அவர்கள் தவறுவதேயில்லை. என்னால் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்க முடியவில்லை! ஆனால், என்னால் திருப்பலி நிறைவேற்ற முடியவில்லை என்றாலும், மறுபடியும் எனக்கு நேரம் இருக்கும்போது, அவர்கள் பிற்பாடு என்னை அழைக்கலாம் என்று நான் அவர்களுக்கு வாக்களித்தேன். இதைத்தான் இந்த மூன்று கிராமங்களிலும் உள்ள கிறிஸ்தவர்கள் செய்தார்கள். அதனால் இந்த

மூன்று கிராமங்களிலும் மேற்கொண்டு இந்த நோய்க்கு வேறு யாரும் பலியாகவில்லை. கிறிஸ்தவர்கள் மட்டும் என்னை அழைக்கவில்லை. மாறாக, பிற மதத்தவரும் என்னிடம் வந்து, தங்கள் நோயாளிகளை வந்து சந்திக்குமாறும், அவர்களுக்கு மருந்து தருமாறும் என்னிடம் கேட்டார்கள். இந்த நோயால் மரணத் தாக்குதலுக்கு உள்ளாகி யிருந்ததாக நான் நினைத்த எல்லோருக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நான் திருமுழுக்குக் கொடுத்தேன். என் அடுத்த கடிதத்தில் இந்த திருமுழுக்குகளில் இரண்டு அல்லது மூன்றைப் பற்றி நான் உனக்குச் சொல்வேன். நேற்று பிறமதத்தைச் சேர்ந்த ஒரு சிறு ஆண் குழந்தைக்கு ஃபிலிபெர் என்ற பெயரில் நான் திருமுழுக்குக் கொடுத்தேன். அவன் 15-18 மாதக் குழந்தை. தேவாலய மணி ஒலித்ததும், அவன் செபிப்பது போல கைகளைக் கூப்பி வைத்துக் கொள்வான் என்று அவனுடைய பாட்டி என்னிடம் சொன்னார்கள். அவன் திருமுழுக்கிற்கு முன்கூட்டியே தகுதியுள்ளவனாயிருந்தான்.

இதற்கு முந்திய கடைசிக் கடிதத்தில், ஓடேட் பாரிஸில் உள்ள எங்கள் வணக்கத்துக்குரிய அதிபர் தந்தையிடம் தான் ஒப்படைக்க விரும்பிய பார்சல் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாள். அவள் விரும்பியபடி அந்தப் பார்சலை அவரிடம் கொடுக்க அவளால் முடிந்ததா? ஜனவரி, அல்லது பெப்ருவரி மாத வாக்கில் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களின் மற்றொரு குழு அங்கிருந்து புறப்படும். நான் தவறாகச் சொல்லவில்லை என்றால், ஓய்வுக்காக பிரான்ஸுக்கு வந்திருந்த அருட்தந்தை ஆன்க்ளாடு, மார்ச் மாதத்தில் தமது தத்துவவியல் வகுப்புகளைத் தொடங்குவதற்காக ஜனவரி, அல்லது பெப்ருவரியில் திரும்பி வருவார். மைக்கா பற்றி ஏதாவது தகவல் சேகரிக்க ஃபிலிபெரால் முடிந்ததா? அதைப் பற்றி அவர் அளவுக்கு மீறி கவலைப்பட வேண்டாம்; அது முதல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அல்ல. கொஞ்சம் மைக்காவைக் கண்டுபிடிக்க அவரால் முடிந்தால், அந்த மைக்கா தகடுகள் ஒவ்வொரு பக்கமும் 30 முதல் 35 சென்டிமீட்டர்கள் அளவுள்ள சதுரங்களின் வடிவத்தில் இருக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்திருக்கட்டும்.

உங்கள் சகோதரரும், சித்தப்பாவுமாகிய என் முழுப் பாசத்துடன்,

லூயி லெவே,சே.ச.

5. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்...

ஆண்டாவூரணி,
டிசம்பர் 6, 1927.

என் அன்புச் சகோதரரே, சகோதரியே, அன்னையே,

...பாளையங்கோட்டையிலுள்ள என் முன்னாள் மாணவர்களில் ஒருவரின் திருநிலைப்படுத்துதல் விழாவில் கலந்துகொள்வதற்காக நான் இன்று மாலை திருச்சிக்குப் புறப்படுகிறேன். இங்கே என்னோடு இருக்கிற தந்தை லெமாயூவும் பாளையங்கோட்டையோடு நெருங்கிய தொடர்புள்ளவராக இருக்கிறார். இந்த மாதம் 15-ஆம் தேதியன்று, பாளையங்கோட்டை பள்ளியின் இயக்குநராகிய தந்தை லூபோ பிரான்சுக்குத் திரும்பிச் செல்கிறார். நீங்கள் பாரிசுக்குப் போக நேர்ந்தால், தந்தை து-க்ரஞ்சுநுவ் அவர்களைச் சந்தியுங்கள். இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். மிக நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப் படுகிற மழை இன்னும் பெய்யவில்லை. மக்களின் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தத் துயரம் முடிவுக்கு வர தூய இறைவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். உங்கள் செபங்களுக்கு என்னை நான் கையளிக்கிறேன்.

உங்கள் சகோதரரும், சித்தப்பாவுமாகிய என் முழுப் பாசத்துடன்,

லூயி லெவே,சே.ச.

தந்தை லெவே நம்பிய செபம்

"எனக்கு வலுவூட்டுகிறவரின்
துணைகொண்டு
எதையும் செய்ய
எனக்கு ஆற்றல் உண்டு."

பிலிப் 4:13

6. ஞானம் தூண்டிய புனித தெரேசா

ஆண்டாவூரணி,
மார்ச் 10, 1928.

என் பிரியமுள்ள மகளுக்கு,

உன் கடிதத்திற்கும், உன் விலையுயர்ந்த பார்சலுக்கும், அதிலிருந்த எல்லாப் பொருட்களுக்கும் உனக்கு நன்றி. ரென்னே மறைமாவட்டத்தின் வழிபாட்டு ஒழுங்கு நூலை வாசித்தேன். **"புனித தெரேசாவின் ஆன்ம உணர்வு"** என்னும் மதிப்பு மிக்க சிறு நூலை என் ஞானவாசகத்திற்குப் பயன்படுத்தி வருகிறேன். குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் ஏற்கெனவே மிக விலையேறப் பெற்ற மகுடத்தில் நம் திருத்தந்தை இப்போதுதான் புதிதாகச் சேர்த்திருக்கிற மகிமையுள்ள பெயர், இந்தப் பக்திப் பற்றுதலுள்ள ஆன்மாவிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவல் தெய்வாதீனமானது என்பதைக் குறித்துக் காட்டுவதுபோல் தோன்றுகிறது. மார்கரெட் மேரி தன் வாழ்வின் ஒவ்வொரு சிறு சிறு விவரங்களிலும் நம் ஆண்டவருக்கு அன்புசெலுத்தியது போல, இயேசுவின் மீதான அன்பை வளர்ப்பதாகிய அந்தப் புனிதையின் பணியைத் தொடர்ந்து செய்யும்படி ஆண்டவர் புனித தெரேசாவை நமக்குத் தந்திருக்கிறார்.

அவள் ஏன் இவ்வளவு அதிகமான புதுமைகளைச் செய்கிறாள்? ஏனெனில் அவள் கடவுளுக்கு எவ்வளவு அதிகமாக அன்பு செலுத்துகிறாள் என்றால், அவருக்கு அவள் எதையும் மறுத்ததில்லை. மோட்சத்தில் இருக்கிற கடவுளும் சின்னத் தெரேஸாவுக்கு எதையுமே மறுப்பதில்லை. அவளே ஆணித்தரமாகச் சொல்வது போல, அன்பு செலுத்துவதே அவளுடைய தேவ அழைத்தலாக இருக்கிறது. அன்பாகவே இருக்கிற இயேசுவுக்கு அன்பு செலுத்துவதும், அவளுடைய இருதயத்தில் கடவுளால் தூண்டப்பட்ட அன்பைக் கொண்டு, ஆன்மாக்கள் அவருக்கு அன்புசெலுத்தும்படி செய்வதுமே அவளுடைய அழைத்தலாக இருக்கிறது.

நீ பார்சலில் சேர்த்து அனுப்பியிருந்த அழகிய திருக்குடும்பப் படங்களுக்காக உனக்கு நன்றி கூறுகிறேன். அவை வண்ணப்

படங்களாகவும், பெரியவையுமாக இருப்பதால், அவை வெகுவாக மதிக்கப்படும்.

திங்கட்கிழமை மாலையில் நான் என் வருடாந்தர தியானத்தைத் தொடங்கினேன். உன் செபங்களுக்கு அவற்றை ஒப்புக்கொடுத்ததாக நான் நினைக்கவில்லை. ஆனாலும் புனிதர்களின் ஒன்றிப்பின் பலனாகவும், கிறிஸ்துவின் ஞான உடலில் நாம் கொண்டுள்ள ஒன்றிப்பின் பலனாகவும், நேரடியான வேண்டுதல்கள் கட்டாயம் தேவை என்று சொல்ல முடியாது.

நம் ஆண்டவர் நம் தேவைகளை அறிந்துள்ளார். நம் சகோதரர்களும், நமக்கு அன்பு செலுத்துகிற அனைவரும் வெளிப்படையான விதத்தில், நம் தேவைகளைப் பற்றிக் குறிப்பிட வில்லை என்றாலும், நமக்குத் தேவையானதைத் தங்கள் செபங்களில் கேட்கிறார்கள் என்பதை அவர் அறிவார். ஒரு பொதுக்கருத்து நம் ஆண்டவருக்குப் போதுமானது... ஓர் இல்லத்தில் நிறையத் தேவைகள் இருக்கின்றன; நம் ஆண்டவருக்கு எல்லா விவரங்களையும் சொல்லிக் கொண்டிருக்காமல் பொதுவாகச் செபிப்பதே போதுமானது.

என் தியானத்திற்குப் பிறகு, மக்களுக்கு நன்றி கூறி இரண்டு கடிதங்கள் எழுதியிருக்கிறேன். இன்னும் சில கடிதங்கள் எழுத நினைக்கிறேன். பணத்தை பாரிஸுக்கு அனுப்புவது முழுவதும் வசதியாக இருக்கும். பாரிசிலிருந்து கணக்கு வழக்குகள் ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த பிறரன்புக் காணிக்கைகளைத் தாமதமின்றி என்னால் பயன்படுத்த முடியும். ஷீனன் எல்டெனனைச் சேர்ந்த என் நவதுறவறத் தலைவர், தந்தை டெனிஸ் கரேர் சில நாட்களுக்கு முன்புதான் போர்டியேயில் தமது 78-ஆம் வயதில் பக்தியோடு இறந்தார். விண்ணகத்தில் என்னை நினைவுகூரும்படி நான் அவரிடம் கேட்டிருந்தேன். தந்தையவர்கள் அப்படியே செய்வார் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அவரை உன் செபங்களுக்குக் கையளிக்கிறேன். எனக்காகச் செபித்துக் கொள்.

லூயி லெவே,சே.ச.

7. ஆன்மீகப் பயிற்சியின் ஆழத்தில் மூழ்கி...

ஆண்டாவூரணி,
ஏப்ரல் 23, 1928.

என் அன்புள்ள மகளுக்கு,

உனக்கு கிறிஸ்துவின் சமாதானம்.

உன் கடைசிக் கடிதத்திற்காகவும், குழந்தை இயேசுவின் புனித தெரேசம்மாளின் சிற்றாலயத்தைக் கட்டத் தேவையான பணத்தைச் சேகரிக்க நீ எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளுக்காகவும் உனக்கு நான் நன்றி கூறுகிறேன். நான் இதற்கு மாறாக சொல்லும் வரையில், இந்த 125 ஃப்ராங்குகளை நீ வைத்துக் கொள். என்னால் முடிந்த வரை சீக்கிரத்தில் பவுஸுக்கு (Pauce) நான் கடிதம் எழுதுவேன். என் கடைசிக் கடிதத்திற்குப் பிறகு, மதுரையில் எட்டு நாள் வருடாந்தரத் தியானத்தில் கலந்துகொண் டேன். அதை நன்றாகச் செய்வதற்கு அன்னை மரியாள் எனக்கு மிகவும் உதவி செய்தார்கள். என் திருமுழுக்கில் அவர்கள் எனக்கு அன்னை மரியாளின் பெயரைத் தந்தார்கள் என்ற எண்ணத்தால், இந்தத் தியானத்தின் போது நான் மிக மகிழ்ச்சியாய் இருந்தேன். கன்னி மரியாளின் தாய்க்குரிய, கனிவுள்ள அக்கறையை நான் உணர்ந்தேன். நம்முடைய தீர்ப்பின் அதிமுக்கியமான தருணத்தில் அன்னை மரியாளின் மீதான கனிவுள்ள பக்தி நமக்கு மிக அதிகமான நம்பிக்கையைத் தரும் என்றும் எனக்குத் தோன்றியது. தன் அன்பிற்குரிய திருமகனின் முன்பாக ஒருவன் எப்படித் தன்னைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை அன்னை மரியாள் அறிந்திருக் கிறார்கள். அவர்கள் நம் தாயாக இருப்பதால், தன் முழு இதயத்தோடும் அந்த வேளைக்காக நம்மைத் தயாரிக்கிறார்கள்.

நான் என் தியானத்தைச் செய்து முடித்துவிட்டேன். மேலும் ஆண்டாவூரணியைச் சேர்ந்த ஏழு பேருக்கு இப்போதுதான் தியானம் கொடுத்து முடித்தேன். அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன் மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்ற ஓர் இளைஞன், என் உபதேசியார், கன்னிமரியாள் சபையின் தலைவர் மற்றும் இந்தக் கிராமத்தையும், பக்கத்திலுள்ள நெடுமரம் என்ற கிராமத்தையும் சேர்ந்த நான்கு பள்ளி

ஆசிரியைகள் ஆகியோர் ஆவர். இதுவே நான் தமிழில் கொடுத்த முதல் தியானம் ஆகும். இது நீடிய கனிகளை விளைவிக்கும் என்று நான் நம்புகிறேன். புனித இஞ்ஞாசியாரின் அறிவுரையின்படி, தியானத்தில் கலந்துகொண்டவர்கள் சாவான பாவத்தின் நினைவால் கடும் அச்ச உணர்வை அடையச் செய்ய என்னால் முடிந்தவரை நன்றாக முயற்சி செய்தேன். அவர்களுடைய சாவு வரைக்கும் ஒரு சாவான பாவத்தைக் கூட இப்போதிருந்து கட்டிக்கொள்ளாமலிருக்க எல்லா நடவடிக்கை களையும் எடுக்கும்படி அவர்களை எச்சரித்தேன்.

ப்ரேட்டன் பழமொழி ஒன்றின்படி "பாவத்தோடு இருப்பதைவிட சாவதே நல்லது" (போத்ஸியுஸ் மோரி க்வாம் ஃபேதாரி). இதைச் சாதிப்பதற்கான வழிகளில், "**ஓ மரியாயே, என் நல்ல தாயாரே, இன்று (இன்றிரவில்) என்னை எல்லா சாவான பாவத்திலிருந்தும் பாதுகாத்தருளும்**" என்ற இந்தச் செபத்தோடு, காலையிலும் மாலையிலும் மூன்று அருள் நிறை மந்திரங்கள் ஜெபிக்கும்படி ஆலோசனை தர நான் மறக்கவில்லை. இந்தச் சிறிய பக்தி முயற்சி எனக்கு ஒரு பழக்கமாக ஆகியுள்ளது. நான் இப்போது அதை விலக்குவதில்லை. நான் நேசிக்கும் அனைவரையும், அதாவது ஓடேட்டையும், அவளுடைய குடும்பம் முழுவதையும், கன்னி மரியாளுக்கு அருகில் நினைவுகூர்வதற்கு இதுவே மிகுந்த மதிப்புள்ள தருணம் என்றும் நான் உணர்கிறேன்; இதே உதவியை நான் அவர்களிடம் கேட்கிறேன். நீயும் இதையே செய்கிறாய் என்று நான் நம்புகிறேன். இதுவரை நீ இதைச் செய்யவில்லை என்றால், இந்தப் பழக்கத்தை இப்போது வளர்த்துக்கொள்.

புனித இஞ்ஞாசியார் ஒரேயொரு சாவான பாவத்தை முதலாய் தடுக்கும்படி உலக முடிவு வரையிலும் துன்பங்களுக்கும், கடும் உழைப்புக்கும் மத்தியில் தன் வாழ்நாள் முழுவதையும் செலவழிக்கத் தயாராக இருந்தார். புனித இஞ்ஞாசியார் கடவுளுக்கு அன்பு செலுத்தினார். ஒரேயொரு சாவான பாவம்கூட எப்படி அவருக்கு வருத்தம் விளைவிக்கின்றது என்பதை அறிந்திருந்தார். அதனால் தான் ஒரு சாவான பாவத்தைக்கூட கட்டிக்கொள்ளாமல் இருப்பதற்காகத் தம்மையே பலியாக்கவும் அவர் தயாராக இருந்தார்.

தங்கள் திருமுழுக்கின் புனிதத்தைப் பாதுகாத்துக் கொண்டுள்ள ஆன்மாக்கள் தாங்கள் சொந்தமாகக் கொண்டுள்ள அளவில்லாத

செல்வத்தைப் புரிந்துகொண்டார்கள் என்றால், தங்கள் மரணம் வரையிலும் அதைப் பாதுகாத்துக்கொள்ள எல்லாவற்றையும் செய்ய மாட்டார்களா? சமீபத்தில் நான் அன்பு செலுத்துகிற ஆன்மாக்கள், இந்த விலைமதிப்புள்ள செல்வத்தை இழக்கும் ஆபத்தில் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். என்னால் உறங்க முடியவில்லை. எப்படியாவது அவர்களைப் பாவத்திலிருந்து பாதுகாக்கும்படி நம் ஆண்டவரிடமும், எல்லாப் புனிதர்களிடமும் நான் மன்றாடினேன். இன்னும் அதைச் செய்துகொண்டிருக்கிறேன், என் எஞ்சியுள்ள வாழ்வு முழுவதும் அதைத் தொடர்ந்து செய்வேன்.

சோதனை நம்மை எப்போதும் ஒரே விதமான வன்முறையோடு தாக்குவதில்லை. இந்தத் தாக்குதல்களில் சிலவற்றை எதிர்த்து நிற்கும்படி, நம்மில் மீதமிருக்கிற பலம் முழுவதையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. என் ஆசைகளையும், விருப்பங்களையும் நன்கு அறிந்திருக்கிற நீ இந்தக் கருத்துக்காக காலையிலும் மாலையிலும் செபிக்கத் தவறாதே. குருக்களாகிய நாங்கள் பூமியின் உப்பாக இருக்கிறோம், சாவான பாவங்களிலிருந்து ஆன்மாக்களைக் காப்பாற்றும்படி எங்களால் முடிந்த எல்லாவற்றையும் நாங்கள் செய்ய வேண்டும்.

கால் மணி நேரம் தியானம் செய்யவும், எல்லாவற்றிற்கும் மேலாக, தனிப் பரிசோதனையையும், படுக்கப் போகுமுன் ஆன்ம சோதனையையும் செய்யும்படி என் தியானத்தில் மக்களை நம்பச் செய்வதற்கு நான் எப்போதும் புனித இஞ்ஞாசியாரின் வழிகாட்டுதலின் கீழ் இருக்க வேண்டும். புனித இஞ்ஞாசியார் தியானத்தைவிட இந்த ஆன்ம சோதனைக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார். ஒரு சிறு காரியமாகத் தோன்றும் இந்தத் தியானப் பயிற்சிகளை மாதக் கணக்காகவும், ஆண்டுக்கணக்காகவும் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு மிக உறுதியான எண்ணமும், சில சமயங்களில் சில உறுதியான கடும் முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இறுதியாக, அலட்சியத்தின் காரணமாக நற்கருணை உட்கொள்வதில் தவறாதிருக்குமாறு நான் அவர்களுக்கு அறிவுறுத்துகிறேன். ஒரு முறை நற்கருணை உட்கொள்ளத் தவறுவதோ, அல்லது மீண்டும் ஒருமுறை அதை உட்கொள்வதோ, ஒரு இழப்பாக அல்லது ஆதாயமாக இருக்கிறது. முடிவில்லா வாழ்வின் ஒளியில் இது மதிப்பிடப்பட வேண்டும்.

உன் கடிதத்தின் இறுதியில் நான் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டுமென்று நீ கேட்கிற சிறு செபத்தைச் செய்ய நான் தவறுவதே கிடையாது. இந்தப் பூமியில் மட்டுமல்ல, மாறாக முடிவில்லாத காலத்திற்கும் விண்ணகத்தில் கிறிஸ்துவின் நன்மைத்தனத்தை எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கும் உயிருள்ள சாட்சிகளில் ஒருவனாய் ஆக உன் சித்தப்பா விரும்புகிறார் என்பது எனக்குத் தெரியும்.

புகைப்படங்கள் எனக்கு அதிகச் செயல்களைச் சொல்லவில்லை என்று என்னால் சொல்ல முடியும். ஆனால் நான் ஆழ்ந்த விதமாய் ஒன்றித்திருக்கிற உன் ஆன்மாவுக்கு அன்புகாட்ட எனக்குப் புகைப்படம் தேவையில்லை. நாளை முடிவில்லா வாழ்வு வரும், அது நம் ஆன்மாக்களைக் கடவுளில் என்றென்றைக்குமாக ஒன்றிணைக்கும் முடிவில்லா வாழ்வாக இருக்கும்; அதற்காக நம்மைத் தயாரிப்பதற்கு, குழந்தை இயேசுவின் புனித தெரேசா வழக்கமாகக் கூறுவது போல, நமக்கு "இன்றைய நாள்" மட்டும் தான் இருக்கிறது. உன் பக்தியுள்ள ஆசையில் ஆர்வமுள்ள சில பக்தியுள்ள ஆன்மாக்களைக் கண்டுபிடிக்க நான் முயற்சி செய்வேன். உன் பக்கத்தில், அவர்கள் சரியான பாதையில் தொடர்ந்து செல்ல அவர்களுக்கு செபங்களின் வழியாக உதவுமாறு, அவர்களுக்காகவும் செபி. இந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, நான் உனக்குப் பரிந்துரைக்கிற சில மிக சிறப்பான கருத்துக்களுக்காக, செபங்களையும், சிறு ஒறுத்தல் களையும், நற்கருணைகளையும் ஒப்புக்கொடுப்பாய் என்றால் நான் உனக்கு மிகவும் நன்றியுள்ளவனாயிருப்பேன். அவை: வரும் ஜூன் 15 அன்று ஆண்டாவூரணி நற்செய்திப் பணிக்களத்தின் பாதுகாவலர் திருநாள் கொண்டாடப்படும். இது இரக்கத்தின் மாதா பங்கைச் சேர்ந்த அனைத்துக் கிறிஸ்தவர்களாலும் கொண்டாடப்படும். ஆனாலும் பல்வேறு சாதிகள் மற்றும் சமூக நிலைகளுக்கு இடையே உள்ள உறவுகள் எப்போதும் எளிதாயிருப்பதில்லை.

என்னைப் பொறுத்தவரை, எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றுமைக் குறைவு பற்றித்தான் நான் அஞ்சுகிறேன். அனைவரும் ஒரு முழுமையான புரிந்துகொள்ளுதலின் நிலையை அடைவதற்காக நான் என்னால் முடிந்ததைச் செய்கிறேன். உன் செபங்களின் உதவியைக் கொண்டும், உன் பெற்றோர், நண்பர்களின் செப உதவியைக் கொண்டும், கடவுளின் ஆசீர்வாதங்களைக் கொண்டும், நம் இயேசுவின் திரு இருதயப் பக்தியைக் கொண்டும், நாம் வெற்றி

வெல்லுவோம் என்று நான் நம்புகிறேன். ஆனாலும் இதற்காக நாம் கடினமாய் உழைக்க வேண்டும்.

தேர்வு நாள் முடிவு செய்யப்பட்டவுடன், எனக்குத் தெரியப்படுத்து. நான் பள்ளியின் சிறு குழந்தைகளும், என் கிறிஸ்தவர்களும் அதற்காகச் செபிக்கும்படி செய்வேன்.

எங்கள் ஒன்றுவிட்ட சகோதரி லெப்பினேக்கு இன்னும் எத்தனை குழந்தைகள் மீதமிருக்கிறார்கள்? அவளது மகனின் இறப்புக்குக் காரணம் என்ன? ப்ராஸ்பர் மற்றும் எலிசபெத் மூலம் திருமதி லெபெல்லீவுக்கு என் சார்பாக நன்றி கூறு. திருமதி ஹாமெலின் மரணம் தொடர்பாக என் இரங்கலைத் தெரிவிக்க நான் யாருக்குக் கடிதம் எழுத வேண்டும்? அவளுடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக நான் உடனடியாக திருப்பலி ஒப்புக்கொடுப்பேன். இறந்தோருக்கான நினைவுப் பகுதியில் நான் அவளை நினைவுகூர்வேன்.

குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் ஆன்ம உணர்வை அதிகமதிகமாக உள்வாங்கிக்கொள்ள நான் முயற்சி செய்கிறேன். ஒரு தடவை அந்தப் புத்தகத்தை வாசித்த பிறகு, நான் மறுபடியும் அதை வாசித்துக் கொண்டிருக்கிறேன். இந்த வாசகம் எனக்கு நன்மை செய்கிறது. இந்த விலையேறப் பெற்ற சிறு நூலை எனக்குப் பரிசாகத் தந்த தாராளமுள்ள உள்ளங்களுக்கு என் சார்பாக நன்றி கூறு.

அனைவருடைய செபங்களுக்கும் நான் என்னைக் கையளிக்கிறேன்.

லூயி லெவே,சே.ச.

லெவேயின் அன்றாடச் செபம்

"ஓ என் இயேசுவே
அன்பின் அரசரே
உமது அன்புள்ள இரக்கத்தை நம்புகிறேன்."

லூயி லெவே,சே.ச.

8. கல்வி வழி மனிதம்

ஆண்டாவூரணி,
ஜூலை 30, 1928.

என் அன்புள்ள மகள் ஓடேட்டுக்கு,

நான் பொறுமையின்றிக் காத்துக்கொண்டிருந்த உனது இந்தக் கடைசிக் கடிதத்திற்காக உனக்கு நன்றி. எனக்கு அனுப்புவதற்காக நீ அருட்தந்தை து-க்ரஞ்சுநுவ்விடம் தந்த மதிப்பு மிக்க பார்சலுக்காகவும் நான் உனக்கு நன்றி கூறுகிறேன். கழுத்துப் பட்டு, பீடத்துணி, அடக்கத் துகில் ஆகிய எல்லாமே வரவேற்கப்படும். நற்கருணையை எடுத்துச்செல்லும் போது, அல்லது நோயாளிகளை மந்திரிக்கும்போது, அல்லது திருமுழுக்கு மற்றும் பல்வேறு ஆசீர்கள் கொடுக்கும்போது நான் ஒவ்வொரு நாளும் கழுத்துப் பட்டைப் பயன்படுத்துகிறேன். பீடத் துணி மிகவும் சிறியது என்றாலும், நான் என் மையத்திற்கு வெளியே உள்ள இடங்களைச் சந்தித்து, திருப்பலி நிறைவேற்றும்போது, அவ்விடங்களில் அதைப் பயன்படுத்துவேன். ஆண்டாவூரணியின் பீடத்தைப் பொறுத்தவரை, என் சகோதரன் மற்றும் திருமதி கார்ஸியாவின் தாராளத்தின் காரணமாக, அதற்கு அடுத்த 20 அல்லது 30 ஆண்டுகளுக்குத் தேவையானதெல்லாமே இருக்கிறது. அவர்களுக்கு நன்றி.

அடக்கத் துகிலைப் பொறுத்தவரை, அது எனக்கு உண்மை யிலேயே தேவை என்பது உனக்குத் தெரியும். நல்ல சூழ்நிலைகளில் பயன்படுத்த என்னிடம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதைத்தான் சாதாரண நாட்களிலும், பெரிய திருநாட்களிலும் ஒரே விதமாக நான் பயன்படுத்துகிறேன். நீ எனக்கு அனுப்பியுள்ள புத்தகங்களுக்காகவும் நான் உனக்கு நன்றி கூறுகிறேன். "புனித தெரேசாவின் ஆன்ம உணர்வு" என்ற புத்தகம் எனக்குப் பிடித்திருக்கிறது. அது என்னை மிக அதிகமாகத் தேற்றியது. நான் அதை மூன்று தடவைகள் வாசித்துவிட்டு, மற்றொரு தந்தை அதனால் பயனடையும்படி அதை அவருக்கு இரவல் தந்திருக்கிறேன். மறை போதகர்களின் சின்னச் சகோதரி தான் நடந்து சென்ற சிறிய பாதையிலே உன்னைக் கரம்பிடித்து வழிநடத்துவதன்

மூலம் உனக்கு வெகுமதி அளிப்பாளாக! தெரேசா இன்னும் ஒரு பரிசைக் கொண்டும் எனக்கு நன்மை செய்திருக்கிறாள். "நோவிஸ்ஸிமா அல்லது புனித தெரேசாவின் கடைசி உரையாடல்" என்ற நூலை நான் பெற்றுக்கொண்டேன். இது சகோதரி இயேசுவின் ஆக்னஸ் நாளுக்கு நாள் பதிவு செய்து வைத்த அவளுடைய வார்த்தைகள், அறிவுரைகள், மற்றும் விளக்கங்களின் ஒரு தொகுப்பு ஆகும்; மேலும் **"மலர்களின் மழைத் தாரைகள்"** என்ற நூலும் எனக்குக் கிடைத்தது. இது புனித தெரேசாவின் வேண்டுதலினால் பெற்றுக்கொள்ளப்பட்ட புதுமைகள் மற்றும் உதவிகளில் சிறந்தவை களின் ஒரு புகழ்பெற்ற தொகுப்பாகும். என் கருத்துக்களுக்காகப் புனித தெரேசாவிடம் செபி. நான் அவளிடம் உனக்காகச் செபிப்பது மட்டுமின்றி, மற்றவர்களையும் அவளிடம் உனக்காகச் செபிக்கும்படி கேட்கிறேன்.

தந்தை ல மெய்ல்லியே புறப்பட்டுச் சென்ற ஒரு மாதத்திற்குப் பிறகு தந்தை மென்டோன்ஸா அவருடைய இடத்தை நிரப்ப வந்திருக்கிறார். கடவுளுக்கு நன்றி! தந்தை எனக்குத் தெரிந்தவர்தான். ஒரு குரு மாணவராக அவர் தம் நீண்ட விடுமுறை நாட்களை ஆண்டா வூரணியில் செலவழித்தார். அதன்பின், கடந்த டிசம்பர் 8-ஆம் நாள், அவரது திருநிலைப்படுத்தும் சடங்கின்போது நான் அங்கிருந்தேன். ஆனால் அவரே ஆறு மாதங்களுக்குப் பிறகு எனக்கு உதவியாளராக வருவார் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இந்தியரான மென்டோன்ஸா தமிழ்நாட்டில் பிறந்தவர் அல்லர். மாறாக, தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள மங்களூரில் பிறந்தவர். நம்மைப் போலவே அவரும் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. தம் குடும்பத்தை விட்டுவிட்டு அவர் இங்கே வர வேண்டியிருந்தது. தந்தை ல மெய்ல்லியேவைப் போல இவர் பலமாகவோ ஆரோக்கியமாகவோ இல்லை. என்றாலும் இவரால் நிறைய வேலைகள் செய்ய முடியும். இவர் தொலைவிலுள்ள கிராமங்களைச் சந்திக்கவும், பள்ளிகளை வழிநடத்தவும், குழந்தை களுக்குக் கற்பிக்கவும் பெரிதும் உதவியாக இருக்கிறார். பள்ளிகளைப் பற்றிப் பேசும்போது, எங்கள் பள்ளிகள் எண்ணிக்கையில் அதிகரித்திருக்கின்றன என்று உனக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது கடைசிக் கடிதத்திற்குப் பிறகு நாங்கள் இரண்டு புதிய பள்ளிகளை உருவாக்கியுள்ளோம். இரயில்வே துறை வேலை நிறுத்தப் போராட்டம் மட்டும் நடந்திராவிடில் மூன்றாவது ஒரு பள்ளியையும் நாங்கள் தொடங்கியிருப்போம்.

சுக்குர்ஸ்புரத்தில் ஒரு புதிய பள்ளி தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் ஏற்கெனவே 27 சிறுவர்களும், 3 சிறுமிகளுமாக 30 மாணவர்களும், ஓர் ஆசிரியரும், ஒரு பெண் ஆசிரியையும் இருக்கிறார்கள். ஞாயிறன்று முறை வைத்து நாங்கள் 3 அல்லது 4 தடவைகள் திருப்பலி நிறைவேற்றுகிற நானாக்குடியில் ஒரு புதிய பள்ளியைத் தொடங்கும்படி, ப்ரேக்கெட்டிலுள்ள ஒரு பள்ளி ஆசிரியைக்கு நான் கடிதம் எழுதியிருந்தேன். அவள் வருவதாகவும், 24 அன்று மதுரைக்கு வந்து, அங்கிருந்து எனக்குத் தந்தி கொடுப்பாள் என்றும் அவளுடைய பங்குக் குரு எனக்கு எழுதியிருந்தார். அவள் தொலைவிலிருந்து இரயில் மூலம் வர வேண்டியிருந்ததாலும், இரயில்வே துறையினர் கடந்த 8 நாட்களாக வேலை நிறுத்தம் செய்வதாலும், அவளால் இரயில் ஏற முடியவில்லை என்று நான் எண்ணுகிறேன். இந்தப் பள்ளியும் நன்றாக வர வேண்டும் என்று வேண்டிக்கொள். இந்த நானாக்குடி கிராமத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்.

ஞாயிறு திருப்பலிக்காக நான் அங்கே சென்றேன். சனிக்கிழமை மாலை ஆறு மணியிலிருந்து, திருப்பலி தொடங்கும் வரை 265 ஒப்புரவு அருட்சாதனங்களை நான் கேட்டேன். அவற்றில் குறைந்தது 30, குழந்தைகளுடையது. இந்தக் குழந்தைகள் அனைவரும் படிக்க ஒரு பள்ளி இல்லாமல் இருக்கிறார்கள். நற்செய்திப் பரப்புப் பணியாளர்கள் அவ்வப்போது மட்டும்தான் இவர்களைக் கவனித்துக்கொள்ள முடிகிறது. ஒரு பள்ளி ஆசிரியர் அல்லது ஆசிரியை பகுதி நேரம் மட்டும் இந்தப் பணியாளர்களுக்குப் பதிலாக குழந்தைகளுக்குச் செபங்களும், மறைக் கல்வியும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டவுடன், அங்கே குழந்தைகளிடம் உடனடியாக ஒரு மாற்றம் வருவதைக் காண முடிகிறது என்று நான் உனக்குச் சொல்லியிருந்தேன். அவர்கள் அதிக நாகரீகம் உள்ளவர்கள் ஆகிறார்கள். கடவுளைப் பற்றியும், நம் திருமறையைப் பற்றியும் புரிந்துகொள்ளத் தொடங்குகிறார்கள். இது என் வழிகாட்டுதலின் கீழ் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையை

ஏழாக்குகிறது. என்னால் அதிகச் செலவுகள் இன்றி முத்துநாடு கிராமத்தில் இன்னும் ஒரு பள்ளி தொடங்க முடியும். இவ்வாறு மூன்றில் இரண்டு பகுதி கிறிஸ்தவக் குழந்தைகள் கத்தோலிக்கப் பள்ளிகளில் கல்வி பெறலாம். இந்தப் பள்ளிகளுக்காகச் செபித்துக் கொள். ஆசிரியர் களுக்குச் சம்பளங்கள் கொடுக்க எனக்குக் கடவுள் வழிகாட்டும்படி செபி. அரசாங்கம் எனக்குக் கொஞ்சம் உதவி செய்கிறது. ஆனால் அவர்கள் முழு சம்பளமும் தருவதில்லை. மீதியைத் தருவதற்கு தேவ பராமரிப்பு என் உதவிக்கு வர வேண்டியுள்ளது.

அன்புள்ள ஓடேட், தயவு செய்து என் சார்பாக உன் பிரியமுள்ள தோழி, சகோதரி மூவொரு கடவுளின் மேரியிடம் போய், என் கருத்துக்களுக்காக அவள் தன் செபங்களை ஒப்புக்கொடுத்த செயலால் நான் மிக அதிகமாகத் தொடப்பட்டேன் என்று அவளிடம் சொல். பதிலுக்கு, என் தினசரிச் செபங்கள் மற்றும் சிறு ஒறுத்தல்களின் வழியாக அவள் பயனடையும்படி நம் ஆண்டவரிடம் நான் செபிப்பேன் என்று அவளுக்கு உறுதி கூறு. ஒவ்வொரு நாளும் இதை மறுபடியும் நம் ஆண்டவரிடம் சொல்வது கூட அவசியமில்லை. எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு முறை அவரிடம் சொல்வதும், அவ்வப்போது அவருக்கு இதை நினைவுபடுத்துவதும் போதுமானது. நம் ஆண்டவரின் அன்பு மிகுந்த இரக்கமுள்ளது. நமக்குப் பிரியமானவர்களை அவர் நினைவுகூர்கிறார்.

அடுத்த ஞாயிறு இயேசு சபை நிறுவனரான புனித இஞ்ஞாசியாரின் திருநாள் ஆகும். சபையின் புனிதர்களிடம் உனக்குள்ள அன்பைக் கவனமாக வளர்த்துக்கொள். இந்த அன்பை நீ உரோமையில் அனுபவித்து உணர்ந்தாய். விண்ணகத்தில் தங்கள் செபங்களைக் கொண்டு, நான் அவர்களுடைய பாதையில் நடக்க எனக்கு உதவும்படி உன் சித்தப்பாவுக்காகச் செபித்துக்கொள்.

கடவுள் உனக்கு அதிகம் தந்திருக்கிறார், தொடர்ந்து அதிகம் தந்து வருகிறார். நீ அவருக்கு நன்றி கூறி, அவரிலுள்ள நம்பிக்கையில் வளர வேண்டும். நம்மால் கொடுக்க முடிந்ததைவிட அதிகமாக அவர் கேட்பதில்லை. நம்மால் எப்போதும் செபிக்க முடியும். செபத்தோடு ஒளியும், திடமும் நமக்கு வரும்.

பிற்பாடு, நான் ப்ராஸ்பருக்கும், எலிசபெத்துக்கும் கடிதம் எழுதி, அதில், அவர்களுடைய தாராளமான தர்மங்களுக்காக நன்றி கூறுவேன். இதற்கிடையே, வாய்மொழியாகவோ, அல்லது கடிதம் மூலமாகவோ அதைச் செய்ய உனக்கு வாய்ப்பிருந்தால், தயவு செய்து, அதைச் செய்துவிடு. வேறு எந்தப் பிறரன்பு நிறுவனங்களின் உதவியும் உனக்குக் கிடைக்கவில்லை என்பது எனக்குப் புரிகிறது. நம்முடைய மற்ற உறவினர்களுக்கு நான் கடிதம் எழுதவில்லை. அப்படி எழுதுவதற்கு முன், இன்னும் சில மாதங்கள் நான் காத்திருப்பேன். திருத்தந்தையின் ஒரு முடிவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அந்த முடிவு, குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் தேவாலயம் அமைந்துள்ள கிராமம் வரையிலும் நல்ல பாதிப்புகளை ஏற்படுத்தலாம். ஒருவேளை, மீண்டும் லிசியேக்குப் போய், வணக்கத்துக்குரிய இல்லத்து அன்னை இயேசுவின் ஆக்னஸைச் சந்திக்க நீ திட்டமிடுகிறாய் என்றால், நீ சரியான நேரத்தில் எனக்கு அறிவித்தால், நான் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுவேன்.

பார்சலைப் பெற்றுக்கொண்ட பிறகு, எக்குயி சகோதரிகளுக்கு நன்றி கூறி நான் கடிதம் எழுதுவேன். நான் பீடத்தருகில் அவர்களுடைய கருத்துக்களை நினைவுகூர்கிறேன் என்பதை ஏற்கெனவே அவர்களுக்கு உறுதிப்படுத்திவிடு. விடை பெறுகிறேன். நற்கருணை உட்கொள்ளும் போது, இயேசுவின் திரு இருதயத்தில் நாம் இணைந்திருப்போம். நம் அனைவரையும் ஒன்றிணைத்து, விண்ணக மகிழ்ச்சிக்கு நம்மை வழிநடத்த வேண்டியது அந்தத் திரு இருதயத்தில் பற்றியெரிந்துகொண் டிருக்கிற அன்புதான் அல்லவா? "(கடிதம் மூலம்) நாம் மீண்டும் சந்திக்கும் வரையில் என் வாழ்த்துக்கள்!"

லூயி லெவே, சே.ச.

லெவேயின் அன்றாடச் செபம்

"ஓ என் இயேசுவே
அன்பின் அரசரே
உமது அன்புள்ள இரக்கத்தை நம்புகிறேன்."

லூயி லெவே,சே.ச.

9. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்

ஆண்டாவூரணி,
அக்டோபர் 19, 1928.

அன்புச் சகோதரருக்கும், சகோதரிக்கும், ஓடேட்டுக்கும் நான் எழுதுவது,

உங்கள் பிரியமுள்ள தாய் அல்லது பாட்டியின் மறைவில் நீங்கள் அனுபவித்த பெரும் வேதனைக்காக என் உண்மையுள்ள இரங்கலை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களை எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. என் நினைவில் முக அம்சங்கள் செதுக்கப்பட்டுள்ள ஒரு சில மனிதர்களில் அவர்களும் ஒருவர். இந்தப் பிரியமுள்ள ஆன்மாவுக்காகச் செபிப்பதும், அவர்களுக்காக நற்கருணையும், திருப்பலியும் ஒப்புக்கொடுப்பதும், அவர்களுடைய கருத்துக்காக மிகுந்த மதிப்புள்ள பேறுபலன்களைச் சம்பாதிப்பதுமே அவர்களிடம் நமக்குள்ள பாசத்தின் மிகச் சிறந்த சாட்சியமாக இருக்கிறது. இங்கே தங்கள் இறந்தவர்களுக்காக முப்பது கிரகோரியன் பூசைகள் ஒப்புக்கொடுக்க முடிந்தவர்களிடம், அப்படிச் செய்யும்படி நான் அறிவுறுத்துகிறேன். இந்தத் திருப்பலிகள் இடைவெளியின்றி தொடர்ந்து 30 நாட்கள் நிறைவேற்றப்பட வேண்டும். எந்த அளவுக்கு என்றால், இந்தப் பூசைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட குருவுக்குத் திடீரென்று ஏதாவது தடை நேர்ந்தால், மற்றொரு குரு இந்தக் கருத்துக்காகத் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்க அவர் ஏற்பாடு செய்து விட வேண்டும். முப்பது நாளில் இந்த முப்பது திருப்பலிகளும் செய்துமுடிக்கப்பட வேண்டும்.

இந்தத் திருப்பலிகளை ஏற்றுக்கொள்வதில் உள்ள துன்பத்தின் காரணமாக, அவற்றிற்காகச் செலுத்தப்படும் தொகை சற்று அதிகமாயிருக்கிறது. எங்கள் பணிக் களத்தில் முப்பது திருப்பலி களுக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூ. 60 ஆகும். அதே வேளையில், முப்பது கிரகோரியன் திருப்பலிகளுக்கு ரூ. 75 செலுத்த வேண்டும். வருடத் தொடக்கத்தில் நாங்கள் இரண்டு குருக்கள் இருந்த போது, எங்கள் பங்கிலுள்ள ஒரு கிறிஸ்தவருக்காக முப்பது கிரகோரியன்

திருப்பலிகள் நிறைவேற்ற நாங்கள் ஒப்புக்கொண்டிருந்தோம். அடுத்தடுத்த முப்பது நாள் திருப்பலிகளுக்கு ஒரு சிறப்பு அருள் தரப்பட்டுள்ளது என்றும், முப்பது திருப்பலிகள் யாருக்காக ஒப்புக் கொடுக்கப்படுகிறதோ, அந்த ஆன்மா அந்தத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது, அல்லது குறைந்த பட்சம், இந்த முப்பது திருப்பலிகள் அனைத்தும் ஒப்புக்கொடுக்கப்பட்டவுடன், உத்தரிக்கிற ஸ்தல நெருப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறது என்றும் திருத்தந்தை புனித கிரகோரியார் நமக்கு உறுதி தருகிறார். என் அனுதின திருப்பலியில், இறந்தோருக்கான நினைவு செபத்தில் என் பிரியமுள்ள அம்மாவையும், பாட்டியையும் நினைவுகூர நான் ஒருபோதும் தவறுவதில்லை.

உங்கள் மதிப்பு மிக்க பார்சல் பாதுகாப்பாக என்னை வந்து அடைந்துவிட்டது. அதற்காக நான் உங்களுக்கு மிகவும் நன்றியோ டிருக்கிறேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை நற்கருணை ஆசீர்வாதத்திற்காக நான் முதல் தடவையாகக் கழுத்துப்பட்டைப் பயன்படுத்தினேன். அதே நாளில் நான் மூடுதுகிலையும் பயன்படுத்தினேன், தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பயன்படுத்தி வருகிறேன். ஏனெனில் பழைய துகில் இனி பயன்படுத்த முடியாததாகிவிட்டது. என் முதல் எழுத்துக்கள் குறிக்கப்பட்ட ஒரு திருமேனித் துகிலை வைத்திருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். திருப்பலிப்பாத்திரத்தை மூடும் தட்டு (பல்லா) மிக நன்றாக இருக்கிறது. நம் ஆண்டவருடைய விலையேறப்பெற்ற திரு இரத்தத்தை மூடுவதற்கென அது தயாரிக்கப்பட்டுள்ளது. அதைப் பரிசாக அளித்தவரை அவர் ஆசீர்வதிக்கத் தவறமாட்டார். தூரத்துக் கிராமங்களில் திருப்பலி நிறைவேற்றும்போது நான் பீடத் துணியைப் பயன்படுத்துவேன். ஆண்டாவூரணியின் முக்கிய பீடத்திற்குப் போதுமான அளவுக்கு அது பெரியதாக இல்லை.

உன் பதக்கங்களும், படங்களும் மிகப் பயனுள்ளவையாக இருக்கின்றன. எங்கள் பள்ளிகளின் பாதுகாவலியான புனித தெரேஸாவுக்கு மகிமையாக ஒரு சிறு பரிசு வழங்கலுக்கு நான் ஏற்பாடு செய்திருந்தேன். உன்னுடைய அருமையான எல்லா பாடுபட்ட சுரூபங்களும், பதக்கங்களும், உன்னுடைய சில அழகான படங்களும்

பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை நோய்ப் சிறுவர்களையும், சிறுமிகளையும் கடி மகிழ்ச்சியடைந்தனர். ஒவ்வொரு மத்தலத்தைச் சேர்ந்த பள்ளியைச் சேர்ந்த 41 சிறுமிகளுக்கும் பரிசுகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. இப்படிப்பட்ட பரிசு வழங்கல் குழந்தைகளிடையே ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்கி, நன்றாகப் படிக்கும் ஆர்வத்தை அவர்களிடையே தூண்டுகிறது. முக்கியமாக சிறுமிகளிடம் குறைவுபடுவது, படிப்பதற்கான தீர்வை அல்ல, மாறாக தொடர்ந்து பள்ளிக்கு வருவதுதான். சிறுமிகள் படிக்க வேண்டியதன் அவசியத்தைப் பெற்றோர் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. மிக அடிக்கடி அவர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் வைத்துக் கொள்கிறார்கள்.

என் பள்ளிகளில் ஆர்வம் காட்டுவதற்காக உனக்கு மிகவும் நன்றி. அவைதான் இப்போது என் கவலைகளின் முதன்மையான காரணமாக இருக்கின்றன. ஏழு பள்ளிகளில் ஐந்து பள்ளிகள் அரசால் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மற்ற இரு பள்ளிகளும் அங்கீகரிக்கப்பட என்னால் முடிந்த வரை நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அரசால் ஏற்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுகிற ஒரு பள்ளிக்கு மாணியங்கள் கிடைக்கின்றன. இந்த மாணியங்கள் ஆசிரியர்களுடைய ஊதியங்களைத் தர போதுமானவையல்ல. எனினும் அவை பெருமளவுக்கு உதவியாக இருக்கின்றன.

நான் மீண்டும் தனியாக இருக்கிறேன். ஆண்டாவூரணியின் உதவியாளர் ஒரு பங்குக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார். எங்கள் நற்செய்தி அறிவிப்புக் குருக்களில் ஒருவர் தவறிப் போட. அவருடைய இடம் நிரப்பப்பட வேண்டியுள்ளதால், அதிபர் தந்தையால் இதுவரை ஆண்டாவூரணிக்கு ஓர் உதவியாளரை அனுப்ப இயலவில்லை.

புனித அவிலா தெரசாளின் திருநாளாகிய அக்டோபர் 15 வரை எங்களுக்கு மழை இல்லை. இந்த வறட்சி மிக ஆழ்ந்த கவலையை ஏற்படுத்திவிட்டது. நீண்ட காலமாக நாங்கள் ஆண்டாவூரணியில் நல்ல தண்ணீர் இல்லாமல் இருந்துவிட்டோம். குடிக்கும் தண்ணீர் எடுப்பதற்கு ஒருவன் 2 அல்லது 3 கி.மீ. தூரம் நடக்க வேண்டும். மக்கள் கிணறுகள்

தோண்டினார்கள். ஆனால் தண்ணீர் உப்பாக இருந்ததைத் தான் கண்டார்கள். நானும் சமையலறை பக்கத்தில் சுமார் 20 அடி ஆழக்கிணறு ஒன்று தோண்டச் செய்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக அதிலும் தண்ணீர் உப்பாயிருக்கிறது. பாத்திரங்கள் கழுவுவதற்கும், நான் ஆலயத்தைச் சுற்றி நட்டு வைத்த ஒரு சில தென்னை மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவும்தான் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். ஆனாலும், கடந்த எட்டு நாட்களாக எங்களுக்கு நல்ல மழை பெய்திருக்கிறது. ஆனாலும் நெல் வயல்களுக்கு அது போதாது. கிராமத்துக் குளங்கள் இன்னும் நிறையவில்லை. குளங்கள் நிறையும் வரை, அறுவடைக்கு நிச்சயமில்லை. நம் ஆண்டவர் எங்களுக்குப் பாதுகாப்பான அறுவடையைத் தருகிற நல்ல மழையை அனுப்பும்படி அவரிடம் வேண்டிக்கொள்.

என் கடைசிக் கடிதத்தில் ஆண்டாவூரணி உள்ளிட்ட ஒரு இட அதிகார மாற்றம் வரவிருக்கிறது என்று நான் உனக்குச் சொன்னேன். இதனால்தான் புனித தெரேசாவின் ஆலய கட்டுமானப் பணியில் நான் அவசரப்படாமல் இருக்கிறேன். வேலைகள் இன்னும் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. ஆனாலும், ஆண்டாவூரணி திருச்சிராப்பள்ளி மறைமாவட்டத்தோடு இருந்துவிடும் என்று தோன்றுகிறது. எங்கள் தந்தையராகிய இயேசு சபையினர் அருளானந்தர் வேதசாட்சியாக மரித்த ஓரியூரை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பு வார்கள். ஓரியூர் ஆண்டாவூரணி நற்செய்திப் பணிக்களத்திற்குள், இங்கிருந்து ஒரு சில கிலோ மீட்டர்கள் தூரத்தில் அமைந்துள்ளது. இதுவும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. திருத்தந்தையின் சிறப்புத் தூதர், மொன்சிஞ்ஞோர் த காஸ்ட்ரோ இன்னும் முடிவு செய்யவில்லை. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் எல்லாம் முடிவாகிவிடும் என்று அவர்கள் சொல்கிறார்கள். எல்லாமே கடவுளின் அதிமிக மகிமைக் காகவும், ஆன்மாக்களின் நன்மைக்காகவும் செய்யப்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்.

வாய்ப்புக் கிடைத்தால், இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ப்ராஸ்பரையும், எலிசபெத்தையும் மீண்டும் பார்த்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்று அவர்களிடம் சொல். ஓடெட் ஒவ்வொரு

வருடமும் தியானத்தில் கலந்துகொள்கிறாள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒருவன் தன் ஆத்துமத்தைப் பக்தியார்வம் நிறைந்ததாய் வைத்திருக்கவும், கடவுளின் செயல்களை மதித்துப் பாராட்டி, அவற்றை அனுபவிக்கவும், தியானத்தைவிட சிறந்த வழி வேறு எதுவுமில்லை. இதுவரை தியானத்தில் கலந்துகொள்ளாதவர்கள் கடவுளோடுள்ள நெருக்கத்தில் கழிக்கப்படும் அந்த நாட்களின் மதிப்பை அறியமாட்டார்கள். ஓடெட் இந்த நல்ல வழக்கத்தைத் தன் மரணம் வரையிலும் காப்பாற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அதற்காகச் செபிக்கிறேன். என் ஒன்றுவிட்ட சகோதரி ஜோசபின் லெபினேயின் தாராளமுள்ள நன்கொடைக்காக என் சார்பாக நன்றி கூறும்படி லால்லுக்கு நான் எழுதுவேன். ஓடேட் மடத்துக்குப் போய் தன் தோழியைப் பார்க்கும்போது, ஆண்டாவூரணியையும் அதன் நற்செய்தி அறிவிப்புப் பணிக்களத்தையும் அவள் பக்தியார்வத்தோடு உட்கொள்ளும் நற்கருணைகளுக்கு ஒப்புக்கொடுக்க மறந்துவிடாமல் இருக்கட்டும். லிசியேயிலிருந்து இரு பதக்கங்கள் அனுப்புமாறு கேட்டிருக்கிறேன். அவை எனக்கு இங்கே அனுப்பப்பட்டுவிடும். ஆனால் அதற்குரிய விலைப்பட்டியல் உங்களுக்கு வரும். மீதமுள்ள பணத்தை வைத்து அதைச் செலுத்திவிடுங்கள்.

உங்கள் செபங்களுக்கு நான் என்னைக் கையளிக்கிறேன்.

உங்கள் சித்தப்பா மற்றும் சகோதரன்,

லூயி லெவே,சே.ச.



10. கல்விப் பணி – மறைப்பணியில் துறவியர் பங்கு

ஆண்டாவூரணி,
டிசம்பர் 12, 1928.

பிரியமுள்ள சகோதரரே, சகோதரியே,

என் பிரியமுள்ள ஓடெட்,

மீண்டும் ஒரு முறை உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துச் சொல்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தமது உதவியைக் கொண்டு விண்ணகத்தைச் சம்பாதித்துக்கொள்ள நமக்கு வாய்ப்புத் தரும்படி இந்த தற்போதைய வாழ்வில் உன்னையும், என்னையும் காத்து வருகிற கடவுள் வாழ்த்தப்படுவாராக. நாம் என்றென்றும் அவரில் சந்திப்போம். அவரை நோக்கி உயர்வதிலும், விண்ணகத்தில் அவரை நிரந்தரமாக, சொந்தமாகக் கொண்டிருக்க உங்களையே தயார் செய்வதிலும் நீங்கள் பெற்றுவரும் முன்னேற்றங்களை உங்கள் கடிதத்தின் வாயிலாக அறிந்து மகிழ்கிறேன்.

புத்தாண்டு நமக்குத் தரப்படும் ஒரு புதிய வாய்ப்பாக இருக்கிறது; அது நம் ஆன்மாவின் மீது கடவுள் கொண்டுள்ள அன்பின் ஒரு புதிய வெளிப்பாடு; நம் நிறைவுநிலைக்காக அவர் கொண்டுள்ள பற்றியெரிகிற ஆர்வத்தின் ஒரு புதிய அடையாளம். தேவ அன்பு, அல்லது கிறிஸ்துவின் அன்பு நம்மைத் தூண்டுகிறது என்று புனித பவுல் சொல்கிறார். இது ஒவ்வோர் ஆன்மாவையும், ஒவ்வொரு கணத்தையும் பொறுத்தமட்டிலும் இதுவே உண்மை.

ஓர் ஆன்மா இதில் அக்கறையோடிருந்தால், அது கிறிஸ்துவின் அன்பை ஆழமாக உணரும், அந்த அன்புக்குப் பதிலன்பு காட்ட வேண்டுமென்ற தூண்டுதலை உணரும். கிறிஸ்துவின் அன்பு, ஓர் ஆன்மாவில் நுழையும்போது, இயேசுவுக்கு அன்பு செலுத்துகிற அயலானுடைய ஆன்மாவின் அன்பையும் தன்னுடன் கூட்டி வரும். இந்த இரண்டாம் அன்பு தன் பங்கிற்கு, ஒருவன் தான் அன்பு செலுத்துகிற ஆன்மாக்களுக்காகத் தன்னைப் பலியாக்கும்படி அவனை வற்புறுத்துகிறது. முடிவில்லா வாழ்வில், எதுவுமே இழக்கப்படுவதில்லை என்றும், விண்ணகத்தைச் சம்பாதித்துக்கொள்ள நாம் ஒருவருக்கொருவர் உதவுவது கடவுளின் விருப்பம் என்றும் ஓர்

ஆன்மா அறிந்திருக்கிறது. எனவே, இந்தப் புது வருடத் தொடக்கத்தில், கிறிஸ்துவின் அன்பு, பிறரன்பு ஆகிய இந்த இரட்டை அன்பில் வேகமாக வளர நாம் ஒருவரையொருவர் வாழ்த்துவோம், ஒருவருக்கொருவர் வாக்களிப்போம். கிறிஸ்துவின் மதிப்பீடுகள் வெளிப்படையானவை, அளவற்றவை.

நம் ஆண்டவரைக் கவனமாக உற்று நோக்குகிற ஒருவன், அவருடைய தெய்வீக வசீகரங்களால் கவரப்படாமல் இருக்க முடியாது. புனித யோவான் அவருடைய வசீகரத்தால் கவரப்பட்டார். அவர்கள் சந்தித்த போது, அவர் இயேசுவின் திருமுகத்தின் மீது பிரகாசித்துக் கொண்டிருந்த கனிவாலும், கருணையாலும், இயேசுவின் புறத் தோற்றத்தாலும் சிறைப்படுத்தப்பட்டார். புனித யோவான் இயேசுவை விட்டுப் போய்விட விரும்பவில்லை. ""ஆண்டவரே, நீர் எங்கே வாழ்கிறீர்?" என்று யோவான் கேட்டார். "வந்து பார்" என்று ஆண்டவர் பதிலளித்தார். இந்த நட்புள்ள அழைப்புக்கு புனித யோவான் செவிசாய்த்து, அந்த நாளின் எஞ்சிய நேரம் முழுவதும், தன் வாழ்வின் எஞ்சிய காலம் முழுவதும், தம் தெய்வீகக் குருவோடு தங்கினார். தந்தையாகிய கடவுள் தமக்குத் தந்துள்ள முழு மகிமையொளியோடும், மகத்துவத்தோடும் தாம் வாழ்கிற விண்ணகத்தை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். நம்மீது கொண்ட அன்பினால் தாம் மறைந்து வாழ்வதும், நாம் அவரைச் சந்திக்கவும், அவரைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டி நமக்காகக் காத்துக் கொண்டிருப்பதுமாகிய நற்கருணைப் பேழையை அவர் நமக்குக் காட்டுவார். சாவான பாவம் தம்மை வெளியே தள்ளாத வரையிலும் தந்தையாகிய கடவுள், பரிசுத்த ஆவியாகிய கடவுள் ஆகியோரின் ஒன்றிப்பில் தாம் வாழ்கிற நம் சொந்த இதயங்களை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். நம்மை விட்டுத் தொலைவில் நாம் அவரைத் தேட வேண்டியதில்லை.

தந்தை பி. ரவோல் ப்ளஸ் என்பவரின் ***"நம்மில் கடவுள்"*** என்ற புத்தகத்தை வாசித்துப் புரிந்துகொண்டதில் ஓடேட் மகிழ்ச்சியா யிருக்கிறாள். இந்த வாசகம் அவளுடைய எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அவளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கடவுள் நமக்குத் தந்தருளுகிற இந்தப் புத்தாண்டின் போது, முன் எப்போதையும் விட அதிகமாக கிறிஸ்து இயேசுவைக் கற்றுக்கொள்ளவும், மேலும் மேலும் அதிகமாக அவரை அறிந்துகொள்ளவும், அவரோடு அதிகமதிகமாக நம்மையே அடையாளம் காணவும் நாம் முயற்சிசெய்வோமாக.

இந்த ஆன்ம குறிக்கோளை அடைய, தியானம் ஓர் ஒப்பற்றதும், மிகச் சிறந்ததுமாகிய வாய்ப்பாக இருக்கிறது. அதனால்தான், நீங்கள் எல்லோரும் குறைந்த பட்சம் 3 அல்லது 4 நாட்களுக்குத் தியானம் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நம் ஆண்டவரிடம் இதைக் கேட்கிறேன்.

என் கிறிஸ்தவ சமுகத்தில், இந்த ஆண்டு பல காரியங்கள் நிகழும். பல காரியங்கள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதனால்தான் அனைத்தும் இறுதியாக கடவுளின் அதிமிக மகிமைக்காகவே செய்யப்படுமாறு, நம் ஆண்டவருடைய திரு இருதயத்திடம் இந்த சிறப்புக் கருத்துக்களைப் பரிந்துரைக்கும்படி ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே நான் உன்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வரும் ஆண்டில் உள்நாட்டுச் சகோதரிகள் சபை ஆண்டாவூரணியில் நிறுவப்படும் என்று நான் நம்புகிறேன். இதுவரை, ஊழியர்கள் குறைவுபடுவதும், எந்த ஸ்தல அதிகாரத்திற்கு உட்பட்டதென்ற நிச்சயமின்மையும் இந்த மடம் நிறுவப்படுவது தாமதமானதற்கு முக்கிய காரணங்களாக இருந்து வந்தன.

இப்போது ஆண்டாவூரணி பணிக்களம் நம் தற்போதைய திருச்சி ஆயரின் இட அதிகாரத்தின் கீழேயே இருக்கும் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. ஆகவே இக்காரியத்தில் மேற்கொண்டு எந்த சிரமமும் இருக்காது. ஆண்டாவூரணிக்கு வரவிருக்கும் சபையின் தாயார், அடுத்த வருடம், 2 அல்லது 3 சகோதரிகளைத் தர தம்மால் முடியும் என்று எனக்கு உறுதிகூறுகிறார். ஆண்டாவூரணியில் ஒரு தொடக்கத்திற்கு இது போதுமானது. இந்த விஷயத்திலும் எந்த சிரமத்திற்கும் இனி இடமில்லை. இப்போது, கல்வியின் மாபெரும் ஞான மற்றும் உலக நன்மைகளைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்டு, தங்கள் பெண் குழந்தைகளை மடத்திற்கு, தங்கிப் படிக்கிறவர்களாகவோ, அல்லது தினமும் வந்து போகிறவர்களாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

மடம் தவிர என் மனதை ஏற்கெனவே ஆக்கிரமித்துள்ள மற்றொரு காரியம், எல்லா கிறிஸ்தவர்களின் உதவியோடும், ஒத்துழைப்போடும் ஆண்டாவூரணியின் புது ஆலயத்தின் பாது காவலருடைய திருநாளின் வெளிப்படையான கொண்டாட்டங்கள்

ஆகும். இந்தத் திருநாள் மே மாதத்தில் வருகிறது. ஏற்கெனவே இந்தக் கருத்தை நான் உன் செபத்திற்குக் கையளித்திருக்கிறேன். இதற்காக இயேசுவின் திரு இருதயத்திடம் என்னோடு சேர்ந்து செபி. **என் துணிகளைச் சலவை செய்பவரிடம் ஒரு கிறிஸ்தவர் ஆகும் விருப்பத்தின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன.** அவர் செபங்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கிறார். அவர் இதில் நீடித்திருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள். எங்களுக்கு ஒரு நல்ல அறுவடைக்கு இன்னும் கொஞ்சம் நல்ல மழை தேவைப்படுகிறது. புனித லூர்து அன்னை மற்றும் புனித தெரேசாவின் பரிந்துரை வழியாக இந்த உதவிக்காக மன்றாடு.

மடம் தவிர, சிறுவர்களுக்கென்று ஒரு பள்ளியும் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அரசு எனக்கு உதவி செய்வதாக வாக்களித்துள்ளது. சென்ற வருடம் மழை பொய்த்துவிட்டதாலும் தண்ணீர் இல்லாமையாலும், நாங்கள் வேலைகளை நிறுத்த வேண்டியதாயிற்று. இது அடுத்த வருடத்தில் நம் ஆண்டவரிடமிருந்து கேட்க வேண்டிய மற்றொரு உதவியாகும். இதற்காக செபி, மற்றவர்களும் செபிக்கும்படி கேள். நம் ஆண்டவர் நூறு மடங்காகத் திருப்பித் தருவார். திருப்பலியில் ஒவ்வொரு நாளும் ஆண்டவரிடம் நான் கேட்கும் வரம் இது. இட அதிகாரம் தொடர்பான பிரச்சினை முடிவடைந்ததும், புனித தெரேஸா சிற்றாலயம் தொடர்பாக இன்னும் செய்தி அறிவிக்கப்படாத குடும்ப உறுப்பினர்களுக்கு நான் மற்றொரு கடிதம் எழுதுவேன்.

திரு கோர்ட்டுவா கடந்த காலத்தில் தாம் செய்தது போல இப்போதும் எனக்கு உதவ மனதாயிருப்பாரா, இல்லையா என்பது உனக்குத் தெரியுமா? திருமதி ஹாமேல் எப்படி? அவர்களுக்கு நான் கடிதம் எழுத வேண்டுமா? அவர்களுடைய முகவரி உனக்குத் தெரியுமா?

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதங்களை அவற்றிற்கு உரியவர்களிடம் சேர்த்துவிடு. முடிந்த வரை அடிக்கடி இயேசுவின் திரு இருதயத்தில், அதாவது, நற்கருணைப் பேழைக்கு முன்பாகவும், நற்கருணை வாங்கும்போதும் நாம் இணைந்திருப்போம்.

என்னை உன் செபங்களுக்குக் கையளிக்கிறேன். மேலும் புது வருடத்திற்காக என் முழு இருதயத்தோடு உன்னை ஆசீர்வதிக்கிறேன்.

லூயி லெவே,சே.ச.

II. அழைப்பின் குரல் கேட்டேன்

கொடைக்கானல் லா ப்ரோவிடென்ஸ்,

ஏப்ரல் 4, 1929.

அன்புச் சகோதரருக்கும், சகோதரிக்கும், மருமகளுக்கும்,

உங்களிடமிருந்து ஒரு கடிதத்திற்காக நான் நீண்ட காலமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஓடேட் என்னை மறந்துவிட்டாளா என்று எண்ணி நான் வியந்து கொண்டிருக்கிறேன். கடைசியாக, அவளுடைய உயிர்ப்பு விழாக் கடிதம் இருளில் ஒரு சூரியக் கதிர்போல் வந்தது. இந்தக் கடிதத்திலிருந்து நீங்கள் காண முடிவது போல, நான் குன்றுகளின்மேல் விடுமுறையில் இருக்கிறேன். ஆண்டாவூரணியில் என் இடத்தை வகிப்பவரை உங்களால் எண்ணிப்பார்க்க முடிகிறதா? இந்த வருடம் தமது மாபெரும் குருமடத்திலிருந்து, தம் இரண்டு மாத விடுமுறையை ஆண்டாவூரணியில் கழிக்க வந்திருக்கிற சுவாமி லெமேல்லியேதான்.

மார்ஷல் ஃபோக்கின் மரணம் மற்றும் அடக்கச் சடங்குகள் பற்றி நீங்கள் தந்துள்ள விவரங்களுக்காக உங்களுக்கு நன்றி. இவ்வளவு நெளிவுசுளிவற்றவராகவும், இவ்வளவு அறிவாளியாகவும், இவ்வளவு பலசாலியாகவும் அதே வேளையில் இவ்வளவு அடக்க முள்ளவராகவும் இருந்த இந்த மனிதர் எப்படி உலகம் முழுவதன் இரக்கத்தையும் வெற்றி கொள்ள முடிந்தது என்பது வியப்பாயிருக்கிறது. மாபெரும் மனித குடும்பம் முழுவதும், கடந்த பத்து வருடங்களாகக் குறைந்த பட்சம் ஒரு பகுதிதான் என்றாலும் தான் அனுபவித்து வந்த சமாதானத்திற்காக அவருக்குக் கடன்பட்டுள்ளது போலத் தோன்றுகிறது. எங்களுக்கு இங்கே வருகிற எல்லா ஆங்கிலச் செய்தித்தாள்களும் அவரைப் புகழ்கின்றன. வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் நடந்த அடக்கச் சடங்கின் போதுதான், பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரும், கால்ஸ் இளவரசரும், பிரிவினைச் சபையினரும் முதல் தடவையாக இங்கிலாந்திலுள்ள இந்த மிகப் புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயத்திற்குள் நுழைந்திருக்கிறார்கள். கால்ஸ் இளவரசர் தம்

பயன்பாட்டிற்காக வைக்கப்பட்ட ஒரு கத்தோலிக்க திருப்பலிப் புத்தகத்தைப் பயன்படுத்தித் திருப்பலிச் செபங்களைப் பின்பற்றி யிருக்கிறார். எல்லாவிடங்களிலும் ஒரு இறைத் தன்மையுள்ள, ஆளுகை செய்கிற அமைதி நிலவியது. இந்த மாபெரும் ஆன்மாவுக்கு மகிமை செலுத்த செபம்தான் ஒரே வழி என்பதை ஒருவர் உணர்ந்திருக்கலாம்.

உரோமையால் வரையறுக்கப்பட்ட மாற்றங்கள் இன்னும் அமல்செய்யப்படவில்லை. ஆண்டாவூரணி திருச்சிராப்பள்ளி மறை மாவட்டத்துடனேயே இணைந்திருக்கும். புனித அருளானந்தர் மறைசாட்சியாக மரணம் அடைந்த ஓரியூர், திருச்சி மறைமாவட்டத்துடன் சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓடெட் இந்த ஆண்டு பாரே-ல-மோனியாலுக்கு திருப் பயணமாகப் போகும் அளவுக்கு அதிர்ஷ்டசாலியாக இருந்தால், ஆண்டா வூரணியின் கிறிஸ்தவர்களும், பிற மதத்தவரும், இயேசுவின் திரு இருதயக் காட்சிகள் நடந்த தேவாலயத்தில் மந்திரிக்கப்பட்ட சில திருப்பண்டங்களின் முன்னால் செபிக்கிறார்கள் என்பதை அவள் மறக்க வேண்டாம். புனித மார்கரெட் மேரியின் ஆன்ம குருவும், இயேசுவின் திரு இருதய பக்தியைப் பரப்புவதில் அவளுடைய கருவியாக இருந்தவருமாகிய த லா கொலம்பியே தந்தையவர்களின் முத்திப்பேறு பட்டத்தை அவர்கள் இந்த ஆண்டு எதிர்பார்க்கிறார்கள். நான் என் வருடாந்தர தியானத்தை இப்போதுதான் முடித்தேன். அதை இயேசுவின் திரு இருதயத்திற்கும், புனித மார்கரெட் மேரிக்கும் அர்ப்பணித்தேன். தியானத்தில் நான் செய்த தீர்மானங்களைப் பிரமாணிக்கத்தோடு கடைப்பிடிக்கும்படி ஓடெட் எனக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.

என் பிரியமுள்ள ஓடேட், "**புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள்**" என்னும் இந்தச் சிறு புத்தகம் ஆன்மீகக் கொள்கைப் புத்தகமாகும். அதைப் புரிந்துகொள்ளவும், அனுபவித்து மகிழவும் வேண்டுமானால், அந்தப் போர்வீரரின் கோட்பாட்டைப் போல அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமது மனமாற்றத்திற்கு முன், புனித இஞ்ஞாசியார் ஒரு படைப்பிரிவின் தலைவராக இருந்தார். இந்த ஆன்மீகப் பயிற்சிகள் புரிந்துகொள்ளப்படவும், வியந்து பாராட்டப்படவும்,

அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது ஏற்கெனவே இந்தப் பயிற்சிகளைச் செய்து, அவற்றை எப்படி வாழ்வில் கடைப்பிடிப்பது என்று அறிந்திருக்கிற ஒருவரின் வழிகாட்டுதலின்கீழ் செய்யப்பட வேண்டும். இவற்றிலிருந்து அதிகபட்ச நன்மை அடைவதற்கு நீங்கள் உங்கள் விடுமுறை நாட்களில் 8 முதல் 10 நாட்களைத் தனியே பிரித்து வைத்து, ஒரு இயேசு சபைக் குருவின் வழிகாட்டுதலின் கீழ் இவை செய்யப்பட வேண்டும். அதன்பின், முழுவதும் மாற்றமடைந்தவளாக நீ வெளியே வருவாய் என்று என்னால் உனக்குச் சொல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன். ஒரு முறை இந்தப் பயிற்சிகளைச் செய்த பிறகு, நீ உலகத்திலேயே இருந்தாலும் சரி, துறவற வாழ்வில் நுழைந்தாலும் சரி, ஒரு சாதாரண கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதில் நீ இனி ஒருபோதும் திருப்தியடைய மாட்டாய்.

புனித இஞ்ஞாசியார் சொல்கிறபடி, இயேசுவின் பணியிலும், அவருடைய திருச்சபையாகிய உரோமைக் கத்தோலிக்க திருச்சபையின் பணியிலும் நீ உன்னையே "தனித்துவமுள்ளவளாக" ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இந்தப் பயிற்சிகளைச் செய்ய விரும்புகிறவர்கள், உன்னைப் போல மாபெரும் தாராளமுள்ள பண்பு நலன்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை என்று இஞ்ஞாசியார் சாதிக்கிறார். இத்தனை மனிதர்கள் மிகுந்த தனித்துவமுள்ளவர்கள். இதன் காரணமாக, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பணியில் தங்களைப் பிரித்துக் காட்டும் ஆசையாலும், நோக்கத்தாலும் ஈர்க்கப்படுவதாக உணராதவர்களுக்கு இந்த முழுப் பயிற்சிகளையும் தருவது அவசியமற்றது.

சார்ல்ஸ் பொரோமியோ தம் காலத்திலேயே கூட, இந்தச் சிறு புத்தகம், அதிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையிலான ஆன்மாக்களை மனந்திருப்பியது என்கிறார். பலர் இந்த ஆன்மீக வாழ்வு முறையை அது தூண்டப்பட்ட விதமாகவே சரியாக மதித்தார்கள். புனித இஞ்ஞாசியார் ஓர் ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்கு இந்தப் பயிற்சிகளைத் தந்த பிறகுதான் இவற்றை எழுதி வைத்தார். இலத்தின், தத்துவம், மறையியல் ஆகியவற்றைக் கற்பதற்கு முன்பாகவே அவர் இவற்றை எழுதினார். "காஸ்டிலிய" மொழியில் அவர் இவற்றை எழுதினார். அதுதான் அவருடைய

தாய்மொழி. இந்தக் கல்வியை முடித்த பிறகும் அவர் அவற்றை மாற்றி எழுதவில்லை. அவை புனித இஞ்ஞாசியார் காலத்திலிருந்து அப்படியே, எந்தத் திருத்தமுமின்றி நிலைத்திருக்கின்றன. இந்த ஆன்மீகப் பயிற்சிகளையும், அவற்றில் அடங்கியுள்ள ஆன்மீக வாழ்வு முறையையும் பாராட்டும் விதமாக திருத்தந்தை பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் புனித இஞ்ஞாசியாரை ஆன்மீகப் பயிற்சிகள் மற்றும், அனைத்து தியான வேலைகள் ஆகியவற்றின் சிறப்புப் பாதுகாவலராக அறிவித்தார். பரிசுத்த தந்தை, தமக்குரிய மற்ற காரியங்களோடு சேர்த்து, ஒரு சேசுசபைக் குருவின் வழிகாட்டுதலின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் எட்டு நாள் தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டார்.

ரென்னேயில் திருச்சட்ட வல்லுனரும், புனித வின்சென்ட் பள்ளித் தலைவருமான தந்தை க்ரோல் என்பவர் ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தியானப் பயிற்சிகளைச் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஜெர்ஸிக்குப் போக வேண்டியிருந்தது, ஏனென்றால் பக்கத்தில் தியான இல்லம் ஏதும் இருக்கவில்லை. மீண்டும் ஒரு முறை: இந்த ஆன்மீகப் பயிற்சிகளைப் புரிந்துகொள்வதற்கு ஒருவன் அந்த அனுபவத்தைப் பெற வேண்டும். ஓடேட் மட்டுமல்ல, மாறாக அவளுடைய தந்தையும், தாயும் கூட இந்தப் பயிற்சிகளை ஒரு தடவையாவது செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதற்கு எங்கே போவது, எப்போது செய்வது போன்ற மேலதிக தகவல்களைப் பெற, நீ தந்தை து-க்ரஞ்சுவுவ் அல்லது உனக்குத் தெரிந்த யாராவது ஒரு இயேசு சபைக் குருவை அணுகலாம். ஒருவேளை நீ கேட்கிற தகவலை அவரால் தர முடியாமல் போனாலும், எங்கள் தியான இல்லங்களின் தலைமைக் குருக்களில் ஒருவரது முகவரியையாவது அவரால் உனக்குத் தர முடியும். இங்கிருந்து என்னால் இதைச் செய்ய முடியாது. 1905-ல் இறந்தவரும், லீல் நகரத்தின் புனிதரும், மாமனிதரும், ஏராளமான பிறரன்புப் பணிகளைத் தொடங்கி வைத்தவரும், மொன்சிஞ்ஞோர் போம்மோந் என்பவரால் தம் வரலாறு எழுதப்பட்டவருமான ஃபிலிபெர் உரோ, ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து தியானப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தார். தியானம் செய்வது என்பது உன்னைப் பொறுத்தவரை, எக்காலத்திற்கும் ஒரு மாபெரும் ஆன்மீக நன்மையை அடைவதாகும்.

நான் எப்படி இயேசு சபையில் சேர்ந்தேன் என்று ஓடேட் என்னிடம் கேட்கிறாள். கடவுளின் பராமரிப்பே என்னை அங்கே கரம் பிடித்து

நடத்திச் சென்றது. அதாவது, ரென்னேயில் இயேசு சபை அவ்வளவாக அறியப்பட்டிருக்கவில்லை, எனக்கும் எதுவும் அதிகம் தெரியாது என்பதால் இது இறைவனின் அருட்கொடைகள்தான். நான் வாசித்த புனித இஞ்ஞாசியாரின் வரலாறும்கூட, சேசு சபை உண்மையில் எப்படிப்பட்டதாக இருந்தது என்பது பற்றி எனக்கு அதிகம் சொல்லவில்லை. ஆனால் நம் ஆண்டவர் நற்செய்தி அறிவிப்புப் பணிகளின் மீதான ஒரு விருப்பத்தை எனக்குத் தந்தார்.

என் இராணுவ சேவையை நான் செய்து கொண்டிருந்த போது, இரண்டு இயேசு சபைக் குருக்கள் பெரிய குருமடத்திற்கு வந்து, திரைப்படக் கருவி மற்றும் படங்கள் ஆகியவற்றின் உதவியோடு மதுரை நற்செய்தி அறிவிப்புப் பணிக்களத்தைப் பற்றி சில உரைகள் ஆற்றினார்கள். அந்த உரைகளின் போது நான் அங்கே இருக்க வில்லை. ஆனாலும் திரைப்படக் கருவியும், படங்களும் இல்லாத மற்றொரு உரையில் என்னால் பங்கு பெற முடிந்தது. அந்த உரை இரண்டு முறை நிகழ்ந்தது. தந்தை கப்பெல் என்ன சொன்னார் என்பது இப்போது எனக்கு நினைவில்லை. ஆனாலும் மதுரை நற்செய்தி அறிவிப்புப் பணிக்களத்தின்மீது ஒரு பெரும் ஈர்ப்பை நான் உணர்ந்தேன்.

புனித பிரான்சிஸ் சவேரியாருக்கு நவநாள் செய்தேன். இந்தக் கருத்துக்காக புதுமைகளின் அரசி தேவாலயத்தில் செபிக்கப் பல தடவைகள் சென்றேன். இந்தப் பணிக்களத்திற்கான ஈர்ப்பு பலப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டது. என் இராணுவ சேவைக் காலம் முடிந்ததும், மதுரைப் பணிக்களத்திற்குச் செல்வதற்காக இயேசு சபையின் இளங்குருத்துவப் பயிற்சியில். நான் சேர்ந்தேன். குருமடத்தை விட்டுப் போக எனக்கு அனுமதி தந்தபோது, பல ஆண்டுகளாக பெரிய குருமடங்களின் தலைவராயிருந்த மாமனிதராகிய திருச்சபை வல்லுநர், த பூர்க் த கோம்தே என்பவர் என்னிடம் இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகளைச் சொன்னார்: **"என் வாழ்நாள் முழுவதும் இயேசு சபையில் சேர நான் முயன்று வந்தேன், ஆனால் அதில் வெற்றி பெறவில்லை. நீ மிக அதிர்ஷ்டசாலி!"** என்றார் அவர். சபையில் சேர்ந்ததும், ஒரு இயேசுசபை உறுப்பினரின் நிறைவுநிலை, அவருடைய அதிபர் அவர் எங்கே இருக்க

வேண்டுமென்று விரும்புகிறாரோ, அங்கே இருப்பதில் இருக்கிறது, அது, கீழ்ப்படிதலின் ஒழுங்குகளின்படி வாழ்வதில் அடங்கியுள்ளது என்பதை நான் புரிந்துகொண்டேன்.

என் கடிதத்தின் தொடக்கத்தில் ஆகாயத்தில் ஒரு இருண்ட மேகம் இருந்ததாக நான் குறிப்பிட்டேன். அது என் ஆன்மாவைத் துயரப்படுத்துகிற ஒரு காரியம்: அது ஒரு சிறு குருமாணவனின் குறைபாடு ஆகும். அவனுடைய கல்விக்காக நான் அவனை அனுப்பினேன். அவன் நீடித்து நிலைத்திருப்பான் என்ற முழுமை யான நம்பிக்கையில் அவனுக்கு உதவி செய்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக, மிகச் சமீபத்தில் அவனுடைய நடத்தை அவனுடைய தேவ அழைப்புக்குத் தகுதியற்றதாக மாறிவிட்டது. இளங்குருமடத்தில் சேர்க்கப்பட அவனுக்கு இனி எந்த வாய்ப்புமில்லை. அவனும், அவனை வழிதவறச் செய்தவர்களும் சரியான பாதைக்குத் திரும்பி வந்து, தங்கள் ஆன்மாக்களைக் காத்துக்கொள்ளுமாறு, அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

நம் மருமகன் ஜூல்ஸ் இராஷு தனக்கு குழந்தை பிறக்கப் போவதாக எழுதியிருந்தான். குழந்தை பிறந்துவிட்டது என்றும், அதற்குத் திருமுழுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்றும், எல்லாம் நன்றாக இருக்கிறது என்றும் நம்புகிறேன். என் ஞான மகள் மேரி ஃபோன்டேனிடமிருந்து எனக்கு எந்தச் செய்தியும் வரவில்லை. அவளைப் பற்றிய செய்தி ஏதாவது உங்களிடம் இருக்கலாம். அவளிடம் எனக்குக் குடும்பச் செய்திகளை விளக்கி எனக்குக் கடிதம் எழுதும்படி சொல்லுங்கள்.

ஆண்டாவூரணியில், சிறுவர் பள்ளி மற்றும் சிறுமியர் பள்ளி களுக்கான அஸ்திவாரங்களை நாங்கள் தோண்டத் தொடங்கி யுள்ளோம். கட்டுமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வரும் ஜூன் மாதம் 16 அல்லது 17-ம் தேதியன்று சகோதரிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். எல்லாம் தயாராகிக் கொண்டிருக்கிறது. எங்கள் பள்ளிகளின் வழியாகத்தான் மனந்திரும்புதல்களுக்கான வழியை நாங்கள் ஆயத்தம் செய்கிறோம் என்று எங்கள் அதிபர் எங்களுக்கு உறுதி தருவதால், இந்த வேலைக்காக வேண்டிக் கொள்ளுங்கள். ஆசிரியர்களுக்கான ஊதியத்தைத் தர பிரிட்டிஷ் அரசு எங்களுக்கு உதவுகிறது. ஆனால் அரசின் உதவி இதற்குப் போதாது.

மீதமுள்ள பணத்தை நாங்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இது கிட்டத்தட்ட ஊதியங்களில் மூன்றில் ஒரு பாகமாகும். எவ்வளவுக்கு அதிகமாக பண ஆதாரங்கள் எனக்கு இருக்கிறதோ, அவ்வளவுக்கு அதிகமாக பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இப்போது என்னிடம் 8 பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இன்னும் 8 பள்ளிகளுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இறைப் பராமரிப்பில் நம்பிக்கை வைப்போம்.

தந்தை லெமேல்லியே இயேசுவின் திரு இருதயத் திருநாள் வரைக்கும் இங்கே எங்களோடு இருப்பார். இந்தத் திருநாள் ஆண்டாவூரணியில் மிகுந்த சிறப்போடும், ஆடம்பரத்தோடும் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக இந்த வருடத்தில், இந்தத் திருநாள் பாவிகளின் மனமாற்றத்தையும், ஆண்டாவூரணி பணிக் களத்தைச் சேர்ந்த எல்லா கிறிஸ்தவர்கள் மத்தியில் சமாதானத்தையும் கொண்டு வர வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுங்கள்.

யாருக்காக நான் உன்னிடம் புகைப்படங்கள் கேட்டிருந்தேனோ, அந்த தந்தை கோமஸ் அவற்றைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவற்றிற்காக உனக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டார். இந்தத் தந்தை பள்ளிகளுக்கு மிக உதவியாக இருந்து வருகிறார். பணிக்களம் சார்ந்த பள்ளிகளுக்குத் தரப்பட வேண்டிய உதவிகளை மேற்பார்வை பார்க்கிற பிரிவில் அவர் உறுப்பினராக இருக்கிறார். அவர் இருப்பதன் பலனாக எங்களுக்கு எந்த அநீதியும் செய்யப்படவில்லை. அதிக நல உதவிகள் எங்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆகவே இந்தப் புகைப்படங்களை அவருக்காகப் பெற்றுத் தருவது ஒரு பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

புனித குழந்தை இயேசுவின் தெரேசாவுக்கு மகிமையாக கட்டப்பட்டுள்ள சிற்றாலயத்தில் வைக்கப்பட வேண்டிய இந்தச் சின்னப் புனிதையின் ஒரு சுரூபத்திற்காக காம்தெஸ் த லா பூர்தோம்மேஜ் தந்தை து-க்ரஞ்சுநுவுக்கு 50 ப்ராங்குகள் அனுப்பியிருக்கிறார் என்பதை நான் உங்களுக்குச் சொன்னேனா என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. சுரூபம் இன்னும் வந்து சேரவில்லை. அது இங்கே வந்து சேர்ந்ததும், நான் காம்தெஸ் த லா பூர்தோம்மேஜ் அவர்களுக்கு எழுதுவேன். இந்த வருடமே சிற்றாலயத்தை மந்திரித்து விட என்னால் முடியும் என்று நம்புகிறேன்.

ஐந்து காய வரம் பெற்ற தெரேசா நியூமென் பற்றி சில கட்டுரைகளை வாசிக்கும் சூழ்நிலை உங்களுக்கு அநேகமாக கிடைத்திருக்கும். இந்த அதிசயமான ஐந்து காய வரத்தைப் பற்றிய, நன்கு எழுதப்பட்ட, தீவிரமுள்ள கட்டுரைகள் உங்களிடம் இருந்தால், கருணை கூர்ந்து எனக்கு அனுப்பி வையுங்கள். மொன்சிஞ்ஞோர் ஆகரையும் மொன்சிஞ்ஞோர் லேவியையும் நீங்கள் சந்திக்கும்போது, நான் அவர்களை மறக்கவில்லை என்றும், அவர்களுடைய செபங்களுக்கு என்னை நான் கையளிக்கிறேன் என்றும் அவர்களுக்கு உறுதி கூறுங்கள்.

விடைபெறுகிறேன். இந்த மரியன்னையின் மாதத்தில், அவர்களிடம் நாம் ஒருவர் ஒருவருக்காகச் செபிப்போம். ஒவ்வொரு நாளும் செபமாலையின் அருள் நிறை மந்திரங்களாகிய ஆன்மீக ரோஜா மலர்களை அவர்களுக்கு அர்ப்பணிப்பதில் நாம் நம்பிக்கையுடன் இருப்போம்.

பாசத்துடன்,

ஜூலி லெவே, சே.ச.



12. ஈதல் இசைபட வாழ்தல்

ல ப்ரோவிதென்ஸ்,
மே 5, 1929.

என் சகோதரரே, சகோதரியே, மருமகளே,

உங்கள் விலையுயர்ந்த சிறிய த்ராகீ பார்சலுக்காக உங்களுக்கு நன்றி (த்ராகீ என்பது சர்க்கரையும், வாதுமைப் பருப்பும் கொண்டு செய்யப்படும் ஒருவகை இனிப்பு, திருமுழுக்கின் போது சிறப்பாக இந்த இனிப்பு ஒரு சிறப்புப் பரிசாகத் தருவது வழக்கம்). இந்த இனிப்புகள் நேற்று நல்ல நிலையில் வந்து சேர்ந்தன. சாக்கலேட்டுகள் மட்டும்தான் செங்கடலைக் கடந்த போது உருகிவிட்டன. ஆனால் த்ராகீக்கள் அப்படியே இருந்தன. மதுரைப் பணிக்களத்தைச் சேர்ந்த பெரும்பாலான நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள் தங்கள் விடுமுறைக்காக இங்கே வந்து கூடியிருந்த சரியான சமயத்தில் அவை வந்து சேர்ந்தன. எங்கள் ஆயர் மொன்சிஞ்ஞோர் ஃபைஸாந்தியே என்பவர் உட்பட எல்லோரும் இனிப்புகளைச் சுவைத்துப் பாராட்டினர். இங்கே இருக்கிற எல்லா நற்செய்திப் பணியாளர்களுக்கும், ஒரு திருமுழுக்குச் சமயத்தில் சில த்ராகீக்களைச் சுவைத்து மிக நீண்ட காலம் ஆகியிருந்தது. அவர்கள் தங்களுக்கு த்ராகீக்களைக் கொண்டு வந்த குழந்தையை வரவேற்றனர். பழைய நாட்களின் நினைவுகளை மீண்டும் நினைவுகூர்ந்தனர். அந்தப் பெட்டியின்மீது பொன்னெழுத்துக்களில் இருந்தபடி, மரிய மதலேன் என்ற பெயர் தரப்பட்டிருந்த அந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தை என்பதைக் குறித்துக் காட்டியது. ஓடேட் அதன் ஞானத் தாயாக இருந்திருப்பாளா? காலப்போக்கில் இந்த எல்லா விவரங்களும் எனக்குக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். எங்கள் அதிபர் குரு, தந்தை மாஹேக்காக சில த்ராகீக்களை எடுத்து வைத்திருக்கிறேன். இவர் ப்ரிட்டனியிலுள்ள குயிம்பெரைச் சேர்ந்தவர். சுமார் எட்டு நாட்களில் இங்கு வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இன்னும் சில இனிப்புகள் ஆண்டாவூரணியில் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிற தந்தை லேமெல்லியேவுக்காக உள்ளன.

பெந்தேகோஸ்தே திருநாளுக்கு நான் அங்கே அவரோடு போய் சேர்ந்து கொள்வேன்.

மே மாதத்தின் போது, கன்னிமரியாளுக்கு அன்புசெலுத்தி, தொடர்ந்து அவர்களைப் பற்றி சிந்தித்து, எல்லாவற்றிலும் அவர் களுக்காக மிகச் சிறந்ததையே நாம் செய்து அவர்களை மகிழ்விக்க நம்மால் முடிந்த வரை சிறப்பாக முயற்சி செய்வோம். ஆசீர்வதிக்கப்பட்ட மரியன்னை நூறு மடங்காக நமக்குத் திருப்பித் தருவார்கள். என் தியானத்தின்போது, மரியன்னையின் திருப்படம் என் சிறு படுக்கைக்கு மேலாகத் தொங்கிக்கொண்டிருந்தது என்பதை நினைவுகூர்ந்து நான் மகிழ்ச்சியாயிருந்தேன். அது நான் விழித்தெழுந்தவுடன் என் கண்களைக் கவர்ந்தது. நாம் அவர்களுடைய குழந்தைகளாக இருப்போம். ஒவ்வொரு நாளும் அவர்களைப் பிரியப்படுத்தும்படி ஏதாவது செய்வோம்.

உங்களுக்கு நன்றி சொல்லும் அதே வேளையில், இந்தக் கடிதம் எழுதும் வாய்ப்பை, உங்கள் பெற்றோர் தபாஸுக்கும் சில கடிதங்களை இணைத்து அனுப்ப நான் பயன்படுத்திக் கொள்கிறேன். அவற்றை ஒரே உறையில், அல்லது தனித்தனியாக லூர்தில்லுள்ள திருமதி பியெனுக்கும், திருமதி இபெர்ட்டீனுக்கும் அனுப்புங்கள். அவர்களுடைய முகவரிகள் எனக்குத் தெரியாது. நான் என் ஆசீர்களை சின்ன மேரி மதலேனுக்கும், அவளுடைய பெற்றோருக்கும், அவர்களுடைய தூய காவல் தூதர்கள் வழியாக அனுப்புகிறேன். உங்கள் எல்லோருடைய செபங்களுக்கும் என்னை நான் கையளிக்கிறேன்.

லூயி லெவே, சே.ச.

பின்குறிப்பு

- இங்கே என்னிடம் இருக்கிற செய்தித்தாள்களில் மார்ஷல் ஃபோக்கின் மரணம், அடக்கம் ஆகியவை பற்றி நான் அறிய விரும்பிய எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் திரு போய்ன்கேரின் உரையை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் கடிதத்தை நான் எழுதிக் கொண்டிருந்த போது, சரியாக இதே நேரத்தில், யாரோ ஒருவர் எனக்கு ஒரு

செய்தித்தாளைக் கொண்டு வந்தார். அதில் அந்தச் செய்தி காணப்படுகிறது.

- இன்னும் ஒரு வாரத்தில் ஆண்டாவூரணிக்கு நான் இறங்கிப் போகும் நாளை எதிர்பார்த்திருப்பேன். அங்கே எனக்காகக் காத்திருக்கும் எல்லா இன்னல்களைப் பற்றியும் நான் நினைக் கிறேன். அந்த குருமாணவனின் தந்தையிடம், அவருடைய மகன் இனி குருமடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டான் என்று நான் அறிவிக்க வேண்டியிருக்கும். அவர் துயரத்திற்கும், கடும் வேதனைக்கும் உள்ளாக இருக்கிறார். அவர் ஒரு மிக நல்ல கிறிஸ்தவர். தம் மகன் ஒரு குரு ஆவான் என்ற எண்ணத்தில் மகிழ்ச்சியாக இருந்தவர். இந்த நிகழ்ச்சி நான் அழும் அளவுக்கு என்னைத் துயரத்திற்குள்ளாக்குகிறது. தம்மால் கற்பிக்கப் பட்டவர்களும், பயிற்றுவிக்கப்பட்டவர்களுமாகிய தம் சொந்த திருத்தூதர் களாலேயே தாம் கைவிடப்படுவதைக் கண்ட போது, ஜெத்சமெனி தோட்டத்தில் நம் ஆண்டவர் அனுபவித்த துயரத்தைப் புரிந்துகொள்ள இது எனக்கு உதவுகிறது.
- நற்கருணைப் பேழையருகிலும், திருப்பலியின் போதும், நற்கருணை உட்கொள்ளும்போதும் நாம் ஒருவரையொருவர் நினைவுகூர்வோமாக.

உங்கள் சகோதரனும், சித்தப்பாவுமான,

லூயி லெவே, சே.ச.



13. உமது சொற்படியே ஆகட்டும்

கொடைக்கானல், மே 6, 1929.

அன்புள்ள ஓடேட்,

உன் நல்ல கடிதத்திற்காகவும், J.O.C. பற்றி நீ தந்துள்ள எல்லா விவரங்களுக்காகவும் உனக்கு நன்றி.

லிசியேக்கு உன்னுடைய திருப்பயணம் பற்றி நீ தரும் எல்லா விவரங்களுக்காகவும் நான் ஏற்கெனவே உனக்கு நன்றி கூறி விட்டேன் என்று நான் நினைத்தேன். குழந்தை இயேசுவின் புனித தெரேசா பற்றிய இரண்டு புத்தகங்களைப் போலவே இந்த விவரங்களும் எனக்கு மிகுந்த ஆர்வமூட்டுபவையாக இருக்கின்றன. லிசியேக்கு உன்னுடைய பயணத்திற்குப் பிறகு எனக்கு எழுதப்பட்ட ஒரு சிறு கடிதத்தில், உன்னுடைய எதிர்காலம் ஒரு சிறப்பான முறையில், குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் மன்றாட்டின் வழியாக நல்ல ஆண்டவரிடம் பரிந்துரைக்கப்படும் என்று நான் உனக்கு உறுதி தந்திருந்தேன்.

உன் எதிர்காலம்! உன் முடிவில்லா மீட்பில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறேன். அதை என்னால் முடிந்தவரை மிக நன்றாக நம் ஆண்டவரிடம் ஒப்படைக்கிறேன். நீ அவரை அறிவது போலவே அவரை மிகநெருக்கமாக அறிந்து, நான் உனக்காக அவரிடம் மிகச் சிறப்பான முறையில் கேட்கிற ஒரு வரம் இருக்கிறது. இறைப் பராமரிப்பு உன்னை எந்த விதமான வாழ்வு நிலைக்கு அழைத்தாலும், நீ அவருக்கு எதையும் மறுக்கக் கூடாது.

நம் ஆண்டவர் நல்ல எண்ணமுள்ள எல்லா ஆன்மாக்களையும் நட்பின் நெருக்கத்திற்கு அழைக்கிறார் என்பதை நன்கு அறிந்திரு. ஓர் உண்மையான நட்புக்குத் தகுதியற்ற குறைபாடு, விசுவாசத் தளர்ச்சி அல்லது துரோகங்களால் நம் ஆண்டவரை துயரத்திற்குள்ளாக்கக் கூடாதவையாகிய இந்த நல்ல எண்ணமுள்ள ஆன்மாக்களுக்கு உன் ஆன்மா சொந்தமாயிருக்கிறது. உன் பெற்றோருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், நீ விரும்பி, உனக்கு வாய்ப்பும் கிடைத்தால், ஞானப்

பயிற்சிகளைச் செய்ய உன்னை அனுமதிக்கும்படி அவர்களிடம் கேட்டிருக்கிறேன். மிகப் பல ஆன்மாக்களை உருமாற்றி, முழுவதுமாக மாற்றியுள்ள இந்த ஆன்மீகப் பயிற்சிகள் உன்னை கடவுளுக்கும், உன் பெற்றோருக்கும் அதிக நல்லவளாக்காமல் போகாது. கார்மேல் சபையின் வணக்கத்துக்குரிய தாயார் உனக்காக முழு இதயத்தோடு செபித்துக் கொண்டிருப்பதாக எனக்கு உறுதி கூறினார்கள். நம் ஆண்டவர் உன்னை இருளில் விட்டுவிட மாட்டார். நீ எங்கே அவருக்கு பணி செய்ய வேண்டும் என்பதை அவரே உனக்கு அறிவிப்பார். சில சமயங்களில் சில சந்தேகங்களுக்கு நீ உட்படுகிறாய் என்றால், ஆன்மாக்களை இயக்குவதில் தேவ வெளிச்சம் பெற்றவராகிய மொன்சிஞ்ஞோர் ஆன்ஷோ இருக்கிறார். அவர் உன் ஆன்மாவுக்கு மிக உதவியாக இருப்பார். நீ நற்கருணை உட்கொள்ளும் நேரங்களில், **"உம்முடைய அதிமிக மகிமைக்காகவும், ஆன்மாக்களின் மாபெரும் நன்மைக்காகவும் நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு ஞான வெளிச்சம் தந்தருளும்"** என்று நம் ஆண்டவரிடம் கேட்க மறக்காதே.

சிறுமிகள் பள்ளிக்கான அருங்காட்சியகத்திற்காக நீ எனக்கு அனுப்பிய புகழ்பெற்ற தபால் அட்டைகளின் அருமையான தொகுப்பிற்காக உனக்கு நன்றி. அவற்றில் சில, ஐரோப்பாவைப் பற்றியும், தாங்கள் ஒருபோதும் பார்த்திராத, உதாரணமாக, பனி போன்ற காட்சிகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிற இந்தியக் குழந்தைகளுக்கு மிகவும் அறிவு புகட்டுபவையாக இருக்கின்றன. ஒரு தபால் அட்டையின் உதவியோடு, பனி எப்படி இருக்கும் என்று குழந்தை களுக்குக் காட்ட முடியும். அவர்கள் இதுவரை கோதுமையையே பார்த்ததில்லை. இருந்தாலும் திருப்பலி அப்பங்கள் கோதுமையால் செய்யப்படுகின்றன என்று அவர்களுக்குச் சொல்லப்படுகிறது. கொடைக்கானலில் இருந்து ரோஜாக் குச்சிகள் கொண்டு வர நினைக்கிறேன். ரோஜா அவர்கள் இதுவரை அதிகம் கேள்விப்படாத ஒரு மலராக இருக்கிறது. ஆனால் நிறைய குழந்தைகள் ஒரு ரோஜாவைக்கூட ஒருபோதும் பார்த்ததேயில்லை. நான் பிரான்சிலிருந்து மிக அதிக வகையான தானியங்களைக் கேட்கவில்லை. மாறாக அவற்றில் சிலவற்றைத்தான் கேட்கிறேன், அவற்றில் முக்கியமானவை, கோதுமை, கறுப்பு கோதுமை, ஓட்ஸ், இன்னும் சில.

திருமறை நூல்களை நீ தொடர்ந்து தியானிக்கிறாய் என்று நான் நம்புகிறேன். புனித யோவான் நற்செய்தி, அதிகாரம் 20-ல் நம் ஆண்டவர் மரிய மதலேனுக்கு அளித்த காட்சியைத் தியானிக்கும்படி உன்னிடம் பரிந்துரைக்கிறேன். இந்தக் காட்சியைத் தியானிப்பது எனக்கு மிகுந்த ஆறுதல் தருகிறது. செபங்கள் மூலமாக மட்டுமின்றி, நம் ஆண்டவரின் திரு இருதயத்தை மகிழ்விக்க நாம் செய்யும் உண்மையுள்ள முயற்சிகளின் வழியாகவும் நிறைவுநிலையின் பாதையில் நாம் ஒருவரையொருவர் தாங்குவோமாக.

நான் உன்னை மறக்க மாட்டேன் என்பதில் உறுதியாயிரு. திரு இருதயத்தில் நாம் இங்கு பூமியில் ஏற்கெனவே இணைந்திருப்போம், அந்தத் திரு இருதயம் நம்மை முடிவில்லா வாழ்வில் இணைக்கும்.

மறைபோதகராகிய உன் மாமா,

லூயி லெவே, சே.ச.



14. கட்டிய எழுப்பியது கோயில் மட்டுமா?

ஆண்டாவூரணி,
டிசம்பர் 15, 1929.

பிரியமுள்ள சகோதரரே, சகோதரியே, மகளே,

குழந்தை இயேசுவின் புனித தெரேசாளின் சிற்றாலயத்திற்காக 500 பிராங்குகள் நன்கொடை அறிவித்த மாகாணப் பிரபுவின் மனைவியிடமிருந்து வந்த ஒரு கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டிய, கடிதம் பெற்றுக்கொண்ட அத்தாட்சிக் கடிதமும், நன்றியறிதல் கடிதமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. நம் நம்பிக்கை எப்படி ஏமாற்றப்படாமல் இருக்கிறது என்பதைப் பாருங்கள். ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே நாம் பாதியளவு தொகையைச் சேகரித்துவிட்டோம். நன்கொடைகள் இத்தோடு நின்றுவிடப் போவதில்லை. எலிசபெத் தன் நன்கொடையை அனுப்பிவிட்டதாக எனக்கு எழுதியிருக்கிறாள். எவ்வளவு என்று அவள் சொல்லவில்லை. இப்போதிருந்து, சிற்றாலயக் கட்டுமானத்தைப் பற்றிய உங்கள் ஆலோசனைகளைத் தரும்போது, ஏற்கெனவே சேகரிக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு என்று குறிப்பிட மறந்துவிடாதீர்கள்.

ஏற்கெனவே பாதித் தொகை சேகரிக்கப்பட்டுவிட்டது. அது பூர்டோமே பிரபுவின் மனைவி, அவர்களுடைய மகன் ரேனே, திருமதி ஹாமெல், திரு லஹாய், திரு பிகோ போன்ற குடும்ப நண்பர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பது நம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிய வந்தால், அவர்கள் கூச்சப்பட மாட்டார்கள். அவர்களுக்கு எப்படி வெகுமதி அளிப்பதென்று குழந்தை இயேசுவின் புனித தெரேசாவுக்குத் தெரியும். ஒரு சிற்றாலயம் கட்ட பண உதவி செய்வதன் மூலம் இப்புனிதையைப் பிறர் அறியச் செய்ய உதவுவது மிகுந்த பயனுள்ள பணி என்பதை அவர்கள் காண்பார்கள். ஆகவே, யாரெல்லாம் நன்கொடை தருவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களோ அந்த மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கெல்லாம் என் முதல் கடிதத்தை நீங்கள் ஏற்கெனவே அனுப்பிவிடலாம். தேவைப்பட்டால் அதில் சில மாற்றங்களைச் செய். ஏற்கெனவே சேகரிக்கப்பட்ட தொகையின்

விவரங்களையும், பணம் தந்தவர்களின் பெயர்களையும் அதில் சேருங்கள்.

காலங்களின் சிரமங்களையும் மீறி, நம் குடும்ப உறுப்பினர்கள் இந்தச் சிற்றாலய கட்டுமானத்திற்குப் பண உதவி செய்ய வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன். இதன் மூலம் அவர்கள் புனித பிரான்சிஸ் சவேரியாருக்குச் சமமாக, வெளிநாடுகளிலுள்ள நற்செய்தி அறிவிப்புப் பணிக்களங்களின் பாதுகாவலியாக இப்போது தான் அறிவிக்கப்பட்டிருக்கிற நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களின் சிறிய சகோதரியின் பாதுகாவலைத் தங்களுக்கும் தங்கள் குழந்தை களுக்கும் உறுதி செய்துகொள்வார்கள்.

சேகரிக்கப்பட்டுள்ள தொகையை நீங்கள் திருமதி ப்ளாங்கா கார்ஸியாவிடம் தந்துவிடலாம். அந்த சுரூபங்கள் ஆண்டா வூரணிக்கு இல்லை. மக்கள் இங்கே அவற்றிற்குப் பணம் தந்துவிடுவார்கள், இவ்வாறு சிற்றாலயத்திற்காக நீங்கள் சேகரித்துள்ள பணத்தை நான் திரும்பப் பெற்றுக்கொள்வேன்.

எலிசபெத்திடமிருந்து இரண்டாவதான ஒரு கடிதம் எனக்கு வந்திருக்கிறது. அதில், லெய்ல் குடும்பத்தில் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்காக நான் செய்திருக்கிற திருப்பலிகளைப் பற்றிக் குறிப்பிட்டு அந்தக் குடும்பத்திற்குத் தான் கடிதம் எழுதியுள்ளதாக அவள் தெரிவித்திருக்கிறாள். மேலும் நம் சிற்றாலய வேலை பற்றியும் அவர்களுக்கு எழுதியுள்ளதாக கூறியிருக்கிறாள்.

நம் ஆலய வேலை பற்றி மக்கள் அறிய உதவி செய்வதன் மூலம் அவர்கள் உங்கள் வேலையை எளிதாக்க முடியும். திரு லியோ மாஷோடுக்கு நான் கடிதம் எழுத நினைத்தேன். ஆனால் புனித மீன் மற்றும் விட்டிலின் புனித அகுஸ்தீன் முன்னாள் மாணவர் இயக்கத்தின் கடைசி அறிக்கையிலிருந்து, அவர் போன வருடம் இறந்துவிட்டார் என்பதை நான் அறிந்து கொண்டேன். அவரது விதவையின் முகவரி உங்களுக்குத் தெரிந்திருந்தால், தயவுசெய்து, அதை எனக்கு அனுப்புங்கள். அதே அறிக்கை, மருத்துவராகிய திரு ஜான் லஸ்லியூரின் முகவரியை எனக்குத் தருகிறது. அது, 68 குவே தாவெனியே, லவால் (மாயென்) என்பதாகும். இவர் ஃபிலிபெரின் குழந்தைப்பருவ நண்பர். ஃபிலிபெர் இவரை அவ்வப்போது

சந்திக்கிறாரா? மைக்கா தகடுகள் பற்றிய தகவலைப் பெற ஃபிலிபெரால் முடிந்ததா, என்ன விலை என்பது பற்றியும் எனக்கு எழுது. அவை கண்ணாடி போல ஊடுருவிக் காணக் கூடியதாயிருக்க வேண்டும். இவை சிற்றாலயத்திற்கென்று சேர்க்கப்பட்ட தொகையிலிருந்து பணம் செலுத்த வேண்டிய பொருட்களில் சிலவாகும். ஒருவேளை, உங்களால் இந்தத் தகடுகளை வாங்க முடியவில்லை என்றால், எனக்குத் தகவல் கொடுங்கள். தேவைப்பட்டால் நான் திருமதி கார்ஸியாவுக்கு எழுதுவேன். இது போன்ற காரியங்களில் ஈடுபட அவருக்கு உங்களைவிட அதிக நேரம் இருக்கிறது. ரென்னே அப்போஸ்தலிக்கப் பணிகள் அமைப்பின் தலைவிக்கும் நான் அனுப்புகிற இந்தக் கடிதத்தை வாசித்துக் காட்டுங்கள். சாத்தியமானால், விளக்கக் கூட்டத்திற்கு முன்பே அது அவரைச் சென்றடைய வேண்டும். ஓடேட் தன் மறைக்கல்வி வகுப்புகளுக்கும், நல்லொழுக்கக் கல்வி வகுப்பு களுக்கும் தொடர்ந்து செல்ல வேண்டுமென்று நான் அவளை மிகவும் ஊக்கப்படுத்துகிறேன். **நம் விசுவாசம் எவ்வளவுக்கு அதிகமாக ஒளிர்விக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு அது திடமடைகிறது.** நான் என் ஞான மகளுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன். அதைத் தயவு செய்து அவளுக்கு அனுப்பிவிடுங்கள். அவளுடைய முகவரியை நான் மறந்துவிட்டேன். உங்களுக்கு அது நினைவிருந்தால் எனக்கு அனுப்பு. எனக்குத் தெரியாத புது நன்கொடை எதுவும் வந்திருந்தால் அதைப் பற்றியும் எனக்குத் தெரிவி.

உங்கள் செபங்களுக்கு என்னை நான் கையளிக்கிறேன்.

உங்கள் சகோதரனும், சித்தப்பாவுமாகிய,

லூயி லெவே, சே.ச.

